ரிஜிஸ்டர் நெ. 1279 போஸ்ட் பாக்ஸ் நெ - 346 டெலிபோன்-நெ. 2583

DRAVIDAN

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர்.

மலர்-13] சென்வண விபவவருஷ மாசிமீ 8உ 1929வருஷ பிப்ரவரிமீ செவ்வாய்க்கிழமை 19உ [இதழ்-335

மந்திரி கனம் சுப்பராயன் படத்திறப்பு

கனம் சேதுரத்ன மய்யர் பேருரை

சர். மகமது உஸ்மான் பிரசங்கம்

சென்ற ஞாயிறன்று செங்கற்பட்டு ஜில்லா போர்டுக்கு மாஜி தலைவர் திரு. வெங்கடராகவலு ரெட்டியார் அவர்களால் பரிசளிக்கப்பட்ட ஸ்தல சுயாட்சி மந்திரிகனம் டாக்டர் சுப்பராய அவர்கள் உருவப்படத்தை மந்திரி கனம் எம். ஆர். சேதுரத்னமய்யா தலைமையில் கூடிய பெருங் கூட்டத்தில் கனம் சர். மகமது உஸ்மான் சாகிப் அவர்கள் சுயமரியாதை மகாநாட்டுப் பந்தலில் திறந்து வைத்தார். அக்கூட்டத்திற்குப் பல்லாயிரக்கணக்கான ஜனங்களும், பிரபலஸ்தர்களும் மற்றையோரும் வந்திருந்தனர்.

கனம் சேது ரத்னமய்யர் பேருரை

அக்கூட்டத்தலைமை வகித்த மந்திரி கனம் சேதுரத்னமய்யர், கனம் டாக்டர் சுப்பராயன் உருவப்படத்தைத் திறந்து வைக்கும்படி சர் மகமது உஸ்மான் சாகிப் யிடுதற்குச சந்தர்ப்பம் வாய்த்ததற்குச் சந்தோஷிக்கின்றேன். அவருடைய பொது வாழ்க்கையில் அவர் பல புயல்களைக் கடந்து முன்னேறியிருக்கின்றார். ஆயினும் அவர் தம் மனச்சாட்சியின்படி நடந்துவந்திருப்பதால் அவர்மீது யாரும் குறைகூறுதற்கு வழி யில்லாமற் போயிற்று.

நான் சாதாரண, தாழ்மையான மிராசுதார் தான். எனக்கு வகுப்பு பேதமோ, வித்தியாசங்களோ கிடையாது. (கரகோஷம்) இந்திய தேச சரித்திரத்தில் வருந்தத்தக்க வகுப்பு வித்தியாசங்கள் நுழைந்துகொண்டு மக்களைத் துன்பத்திற்குள்ளாக்கிக் கேவலப்படுத்திவிட்டது. நாட்டின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் ஒற்றுமையான போராட்டத்தைச் சார்ந்திருக்கின்றதேயன்றி, தனித்தனியே பிரிந்து நிற்பதனுல் ஒருபோதும் முன்னேற்ற மேற்படாது. உலக இயக்கம் பொதுவான நோக்கத்தில் வெற்றி பெறும்போக்கில் வளர்ந்து வருகின்றது. உலகத்தில் எல்லா சக்திகளும் சுயமரியாதையான உன்னத கொள்கையை நிலைநாட்டுவதற்குத் தான் பாடுபட்டு வருகின்றன. இன்றைக்கும் இம்மேடையின் மீது நீங்கள் பலவேறு வகுப்பைச் சேர்ந்தோர் குழுமியிருக்கக் காண்கிறீர்கள். இக்குழுஸ்லிம்களும், பிராமணரும், பிரா சகாவும் என் சொந்த நண்பருமான டாக்டர் சுப்பராயன் படமேயாகும். இத்தகைய பலபுராணங்களால் இன்று மாலை நான் இங்கு வந்ததற்கு அளவற்ற மகிழ்ச்சி யடைகிறேன். டாக்டர் சுப்பராயன் சென்னை பிரசிடென்சி கலாசாலையில் பி. ஏ. பரீட்சையில் தேறிய பின் இங்கிலாந்துக்குச் சென்று பலவாண்டுகள் ஆங்கு படித்தபின் சென்னைக்குத் திரும்பிவந்தார். சீர்திருத்தத்திற்குப்பின் அவர் சட்டசபை மெம்பராகி முதலாவது சீர்திருத்த சட்டசபையின் காலத்தில் அவர் மந்திரியின் காரியதரிஸியுமாயுமிருந்தார். மூன்றாண்டுக அவர் இளைஞரென்பதையும் தாய்நாட்டுக்கு சுயநலமற்ற சேவை செய்யவிருப்பவரென்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவர் நீண்ட ஆயுளுடன் சீரும் சிறப்பும் பெற்றிருக்க வேண்டுமென்று என்னுடன் நீங்களும் சேர்ந்து பிரார்த்திப்பீர்களென்று நம்புகின்றேன். டாக்டர் சுப்பராயன் என் சொந்த நண்பராதரால் அவர் படத்தைத் திறந்து வைப்பதற்கு எனக்கு மிகுந்த சந்தோஷமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீமான் வெங்கடராகவலு ரெட்டியார் செங்கல்பட்டு ஜில்லா போர்டுக்கு இப்படத்தைப் பரிசளித்ததற்காக உங்கள் சார்பாகவும் என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் எனக் கூறி பெருத்த கரகோஷத்தினிடையே படத்தைத் திறந்துவைத்தார்.

வந்தனோபசாரம்

பின்னர் திரு. கே.வி. மேனன் அவர்கள் வந்தனோபசாரம் கூறுகையில், சர். மகமது உஸ்மான் அவர்களைக் குறித்து உங்கள் முன் பேசவேண்டிய அவசியமில்லை. அவர் உத்தியோகஸ்தராயில்லாத காலத்திலும் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களுள் ஒருவராயிருந்த போதும் அவரை நீங்கள்நன்கறிவீர்கள். அவர்சென்னை சர்க்கார் நிர்வாக மெம்பர்களுள் ஒருவரான பின்னும் அவர் நம் கட்சிக்காக நிர்வாகசபையிலும்சட்டசபையிலும் நிலையான சொல்வாக்குடன் அக்கட்சிக்குப் பலமளித்து வந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவர் இங்கு விஜயம் செய்தது பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

இக் கூட்டத் தலைமை வகித்திருந்த கனவானைக் குறித்தும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். கனம் சேது ரத்தனமய்யர் தமது பேருரையில் தம் உணர்ச்சியை விளக்கிப் பேசியிருப்பது போன்று, தமது வகுப்பு சம்பந்தமான உணர்ச்சியில் ஒப்பற்றவர்களான வகுப்பைச் சேர்ந்த ஒருவராயினும் வகுப்பு உணர்ச்சி என்ற தொல்லையற்றவரென்பதை நன்கு விளக்கியிருக்கின்றார். வகுப்புகள் சம்பந்தமான நீதி வழங்க வேண்டு மென்னும் மேலான கொள்கையுடையோருள் அவரும் ஒருவர். அத்தகைய உணர்ச்சி யுடையோர் பிராமணராயினும் பிராமணரலலாதாராயினும் அவர்களை நாம் பாராட்டாதிருக்க முடியாது. (கேளுங்கள் என்ற சத்தமும் கரகோஷமும்) அவரை நீங்கள்சந்தோஷஆரவாரத்துடன்வரவேற்று கௌரவித்ததே நாம் பிராமணரை அவர்கள் பிராமணரென்பதற்காக துவேஷப்பதில்லை என்பதையும்

சென்னை கிண்டி

குதிரை பந்தயம்

1928—29

சம்மர் மீட்டிங்

புதன்கிழமை ... பிப்ரவரி ... 20
சனிக்கிழமை ... ,, ... 23

(301 இ)

ஊர்வல வரவேற்புக் காட்சி

ஆலந்தூர்

போட்டோ நியூஸ் ஏஜன்ஸி

வண்டலூர்

அவர்களைக் கேட்டுக்கொண்டு பேசுகையில், இக்கூட்ட நிகழ்ச்சிகளில் நானும கலந்துகொள்வதற்குச் சந்தர்ப்ப மளித்ததற்காக உங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இத்தகைய பிரபலஸ்தர்களின் உருவப்படங்களைத் திறந்து வைப்பது இளைஞர்களுக்கும், வயதானவர்களுக்கும் அவர்கள் பொது வாழ்க்கையில் பேரூக்கமளிப்பதாயிருக்கு மென்பதே என்சொந்த அபிப்பிராயம். பெரியார்களின் வாழ்க்கைகள் நமக்கு நமது வாழ்க்கையைநன்கு நடாத்தும் வழிகளை நினைப்பூட்டுபவைகளாயிருக்கின்றன. என்நண்பர்கனம்டாக்டர் சுப்பராயன் அவர்களின் திறமையைக் குறித்தும், தகுதிகளைக் குறித்தும் நான் பேசுவது அதிகப் பிரசங்கமெனக்கொள்ளக் கூடும். (நகைப்பும் கரகோஷமும்) ஆயினும், அவருடன் சேர்ந்து வேலை செய்வது ஒரு பாக்கியமென்று தான் சொல்லுவேன். அவருடைய குளிர்ந்த தன்மையும், நற்குணமும், வேலையில் அவருக்குள்ள சுருசுருப்பும், அவருடைய அனுதாபமான போக்கும், முக்கியமாக அவருடைய நேர்மையும் தான் அவர்பால் எனக்கு அளவற்ற அன்புண்டாக்கியது. இது வரையில் நான் அவரைக் குறித்து வெளியிடாதிருந்த உணர்ச்சியைத் தற்போது வெளி மணரல்லாதரும் ஒன்றுசேர்ந்துமகா நாட்டில் சம்பந்தபட்டிருக்கின்றனர். (கரகோஷம்) பொதுவானவிஷயம்நம்மனைவரையும்ஒன்று கூட்டுகின்றது. இனியும்நமது வேலைகளில் நாம் ஒற்றுமைப்பட்டுழைப்போமென்று நம்புவோமாக எனக்கூறி, சர். மகமது உஸ்மான் சாகிப் அவர்களைப் படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

சர். மகமது உஸ்மான் சாகிப்

கனம் சர் மகமது உஸ்மான் சாகிப் படத்தைத் திறந்து வைக்கு முன் பேசுகையில், இன்று நண்பர்டாக்டர் சுப்பராயன் உருவப்படத்தைத் திறந்து வைப்பதான சந்தோஷமான வேலையை நிறைவேற்றுவதற்கு எனக்குச் சந்தர்ப்ப மளித்ததற்காக என் நண்பர் அக்கிராசனருக்கும், ஜில்லா போர்டு பிரஸிடெண்டு திரு. எம். கே. ரெட்டியாருக்கும் என் மனமார்ந்த வர்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதற்கண் இப்படம் செங்கற்பட்டு ஜில்லா போர்டின் மாஜிதலைவரான என்நண்பர் வெங்கடராகவலு ரெட்டியாரால் ஜில்லா போர்டுக்குப் பரிசளிக்கப்பட்டதாதலால், அதனை முக்கியமான தாகக் கௌரவிக்கிறேன். இரண்டாவதாக நான் திறந்துவைக்கப்போகும் படம் என்னுடன் சென்னை சர்க்காரில் சேர்ந்துழைக்கும் ளுக்கு முன் அவர் சென்னை சர்க்கார் முதன்மந்திரியானுர். சர்க்காரில் அவருடன் சகாவாய் வேலை செய்துவரும் நான்அவர் ஆங்காங்கு செய்து வரும் நல்ல வேலைகளையும் நன்மைகளையும் விளக்கப்படுவது தகுதியல்ல. ஆனுல், ஒன்று மட்டும், சொல்ல விரும்புகிறேன். அதாவது அவர் மந்திரியாய் வெற்றியுடன் வேலைசெய்து வருகின்றார் என்பதை நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்களென்றே நம்புகின்றேன். அவர் எல்லா வகுப்பாராலும் விரும்பப்படுபவராயும் யாவருக்கும் நண்பராயுமிருந்து வருகின்றார். என் நண்பர் சேதுரத்னமய்யர் எடுத்துக் காட்டியதுபோல அவர் இச்சென்னை மாகாணத்து பிராமணரல்லாதாரின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கின்றார். (கரகோஷம்) விஸ்வாசத்துடன் பாடுபட்டு வந்திருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சிக்குச் சட்டசபையில் பலம் குன்றி பிற்போக்கான அம்சங்கள் நாட்டில் அக்கட்சிக்கு விரோதமான விஷப்பிரசாரம் செய்து வந்த போதும் சர் மகமது உஸ்மான் சர்க்கார் ஆனுல்அவர்களுடைய வகுப்பு உணர்ச்சியைத்தான் வெறுக்கின்றோ மென்பதையும்அவருக்குமட்டுமன்றிஅவர் வகுப்பைச் சேர்ந்த மற்றையோருக்கும்நன் குணர்த்தும் அறி குறியாயிருக்கின்றது , எனக் கூறினுர்.

பிழைதிருத்தம்

நேற்று 'திராவிடன்' 3-ம் பக்கத்தில் வெளியாயிருக்கும் திருநாயக்கர்பேருரை முதல் பத்தி இரண்டாம் பத்தியாய் புரண்டு அச்சாகியிருப்பதை இரண்டாம் பத்தியை முதலாவது பத்தியிலிருந்து வாசித்துக்கொள்ளும் படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். (ப—ர்.)

யார் தேச பக்தர்கள்?

வெளிநாட்டுப் போட்டியிலிருந்து யார் உள்நாட்டுக் கைத்தொழிலைக் காப்பாற்றுகிறார்களோ, அவர்களே!
மெட்ராஸ் பென்சில் பாக்டரி.

289 டி.

இந்தியச் சட்டசபை

அதிகப்படியான கிராண்டு வாதம்

அறிக்கையை வாதிக்க சபைக் குரிமை

கமிஷன் கிராண்டு நிறைவேற்றம்

புதியடெல்லி, பிப் 19

இன்று இந்தியச்சட்டசபை கூடிய போதுஹார்டாக் கமிட்டிக்கும் சங்கரன் நாயர் கமிட்டிக்கும் கிராண்டைகொடுக்க வேண்டுமென்று கேட்டு இன்று வரப்போகும் தீர்மானத்திற்கு பரபரப்புடன் ஆதரவு சேகரிக்கப்பட்டது.

நாளை ரயில்வே வரவு செலவு கணக்கை ஆஜர் செய்யப்படப்போகின்றதுபற்றி சபையில் கிஞ்சித்தும் மனக்கிளர்ச்சியே இல்லை. ஆனால் ரயில்வே போர்டில் தொழிலாளர் விவகாரங்களை கவனிக்க ஐந்தாம் மெம்பர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதற்கு ஆதரவு கடுமையாய், பரபரப்புடன் சேகரிக்கப்படுகின்றது. இவ்விதமிருப்பதற்கு வரவுசெலவு கணக்கில் கட்டணம் ரேட் முதலியவைகளில் அதிசய செய்திகள் ஒன்றும் தெரிவிக்கப்படப்போவதில்லை என்று நம்பப்படுவதே காரணமாகவிருக்கலாம்.

கேள்விகளும் பதிலும்.

சர். புருஷோத்தமதாஸ் தக்கூர் தாஸ் கேட்ட கேள்விக்கு, இணக்க வயதுக் கமிட்டியின் அறிக்கை ஏப்ரல் இறுதிக்குள் தயாராகி விடுமென்று அதன் தலைவர் எதிர்பார்க்கின்றார் என்றும், அது அரசாங்கத்திற்கு மே மாதம் 15ந் தேதி ஆஜர் செய்யப்படலமென்றும் கனம் திரு. ஜேம்ஸ் கிரிரார் பதில் கூறினார்.

வந்தனம் செய்யாததிற்கு தண்டனையா?

ஐம்பது ஆண்டுகளாக கிஸ்மேயோவில் பிரபல வியாபாரியாயிருக்கும் போரா வகுப்பைச் சார்ந்த திரு. மூகமத் அலி இப்றாஹிம்ஜி ஆதம்ஜியை அவர் கவர்னரை பாராமையினால் அவருக்கு வந்தனம் செய்யாததிற்காக அவரைவெளியே அனுப்பியதைப்பற்றி கேள்விகேட்டார்.

அதற்கு சர். டெனிஸ்பிரே இந்திய அரசாங்கம் சக்ரவர்த்தியின் அரசாங்கத்திற்கு தெரிவித்ததாகவும், அதன்பேரில் அவரை வெளியே அனுப்பும் உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளதென்றும் கூறினர்.

கிஸ்மேயோ கியாவில் கான்சலேட்டை மாற்ற அரசாங்கம் உத்தேசிக்கவில்லை என்றும், ஆனால் சக்ரவர்த்தி அரசாங்கம் இரண்டு நாடுகட்கும் ஏற்பட்ட சமரச ஏற்பாட்டின் சம்பந்தமாக இத்தாலி நாட்டிற்கு மாற்றிக்கொடுத்துள்ள பூபுவாந்திலிருக்கும் பிரிட்டிஷ் இந்திய குடிகள் அடிக்கடி ஜெனியா அதிகாரிகளிடம் விண்ணப்பித்து வருகின்றனர் என்றும் கூறினர்.

ஸ்டெரிலிங்கடன்

திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் லண்டனில் நூற்றுக்கு இருபது வீதம் ஸ்டெர்லிங்கடன் வாங்க நாடியதற்கு பணம் அகப்படாதே தானிருக்கின்றதா என்று கேட்டார்.

நிதி இலாக்கா மெம்பர் பணம் அகப்படவில்லை என்று பதிலளித்தார்.

திரு ஏ. ரெங்கசாமி அய்யங்கார் அதற்குக்காரணம் என்ன என்று வற்புறுத்திக் கேட்டபோது, அக்கடன் செல்வச் செழிப்பு அதிருப்திகரமான நிலையிலிருக்கும்போது வாங்க பிரயத்தனப்படப்பட்டுள்ளதென்றும், அத்துடன் மன்னர்பிரான் பிணிவாய்ப்பட்டுள்ளமையால் அதிலே எல்லோர் கவனமும் சென்றுவிட்டதென்றும், ஆனால் இப்பொழுது இக்கடன் வாங்கமுயன்றால் அது கட்டாயம் கிடைக்குமென்றும் அவர் கூறினர்.

கேள்விகட்குப் பதிலளிக்கப்பட்டு முடிந்ததும் வாராதிருந்த அங்கத்தினர்களில் பலர் வந்து சேர்ந்தனர். எக்கட்சித் தலைவர்களும் தங்கள் ஆசனத்திலில்லை.

காந்தியுடன் கலந்தாலோசித்தல்

சட்டசபையில் பண்டிட் மோதிலால், பண்டிட் மாளவியா, திரு. ஜின்னா முதலியோர், அரசப்பிரதிநிதிக்கு திரு. படேல் கொடுக்கும் விருந்தில் திரு. காந்தியும் மற்றைய கட்சித் தலைவர்களும் அவரை சந்திக்கப் போகின்றனர் என்னும் வதந்தியால் எழுந்துள்ள அரசியல் விவகார கேள்வியைக் குறித்து திரு. காந்தியுடன் கலந்தாலோசிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று பேசிக்கொள்ளப்பட்டது.

அதிகப்படியான கிராண்டு.

அதிகப்படியான கிராண்டைப் பற்றி திரு. பி. தாஸ் முக்கியமான கேள்வியை அதாவது பொதுக் கணக்குக் கமிட்டி அறிக்கையை வாதிக்க இந்தியச் சட்டசபைக்குள்ள உரிமையைப்பற்றி கேள்வி கேட்டார். பொதுக்கணக்குக் கமிட்டி சிபார்சு செய்தும் அதை வாதிக்க இந்தியச் சட்டசபைக்கு உரிமை கொடுக்க மறுப்பதைப்பற்றி வருந்தினர்.

சர் ஜார்ஜ் சஸ்டர் உபகிராண்டுகளின் மீது பின்பற்றும் நோக்கத்தைப்பற்றி கேட்கக் கூடாதென்னும் தலைவரின் தீர்ப்பை எடுத்துக் காட்டினர்.

திரு. கிரஹாம் அதைப்பற்றி வாதிக்க ஓர்நாள் ஒதுக்கும்படிக் கேட்டு தனியாக வேண்டிக் கொள்ளப்படவில்லை என்று கூறினர்.

திரு. ஏ. ரெங்கசாமி அய்யங்கார் அந்த கிராண்டுகேட்டு நிதி இலாக்கா மெம்பர் தீர்மானம்பிரேரேபிக்கு முன்பு அறிக்கையைப்பற்றி வாதிக்க சபைக்கு உரிமை வேண்டுமென வற்புறுத்தினர். சைமன் கமிஷன் நடவடிக்கைகட்குகாத்துக்கொண்டிராது அறிக்கையைப்பற்றி வாதிக்க சபைக்கு தருணம் அளிப்பதைப்பற்றி யோசிக்குமாறே பொது நிதிக் கமிட்டி அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளதென்றும், திரு. பி. தாசிற்கு உண்மை தெரியாதிருக்கலா மென்று,சைமன் கமிசன் விரைவில் டெல்லிக்கு வருகின்றதென்றும் (நகைப்பு) தாம் இவ்விடயத்தைப்பற்றி கமிசனுடன் வாதிக்க உத்தேசித்துள்ளதாயும், இதைப்பற்றி கட்சிப் பிரதிநிதிகளுடனும் வாதிக்க விரும்புவதாயும், இவ்விடயமாய் சபையின் பொது விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதே தனது விருப்பமென்றும், எனவே அதுபற்றி இக்நிலையில்வேறெதுவும் கூற இயலாதென்றும் சர். ஜார்ஜ் சஸ்டர் கூறினர்.

இந்திய அரசாங்க ஆக்ட் பொதுகணக்குக் கமிட்டி நியமிக்க அதிகாரம் கொடுத்துள்ளமையால் அதன் இயல்பான கருத்து அக்கமிட்டியின் அறிக்கை சபையில் வாதிக்கப்பட வேண்டியதென்பதே என்று திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் கூறினர்.

திரு எம். எஸ். ஆனேயும் இவ்விதம் திரு. செட்டியார் கூறியதை ஆதரித்தார். சர். புருஷோத்தமதாஸ் அக்கமிட்டியிலுள்ள கட்சிப்பிரதிநிதிகளெல்லாம் அதுபற்றி பலமாய் விண்ணப்பித்துள்ளார்கள் என்று வற்புறுத்திக் கூறினர்.

தலைவர் இவ்வளவு முக்கியமான கேள்வியை திரு. பி. தாஸ் எழுப்பியதற்காக சபை அவருக்கு நன்றி செலுத்தவேண்டுமென்றும், பொதுக்கணக்குக் கமிட்டி சபையினாலே சிருஷ்டிக்கப்பட்டதாகையினால் அதன் அறிக்கையைப்பற்றி இச்சபை வாதிப்பதே சரியான முறையாகுமென்றும் கூறினர்.

சர். ஜார்ஜ் சஸ்டர் ஓர் உபகிராண்டின் மீது பின்பற்றும் முறையைப்பற்றி திரு பி. தாஸ் வாதிப்பதை ஆட்சேபித்தார்

தலைவர் அறிக்கை

தலைவர் கூறுயதாவது:—திரு. பி. தாஸ் பொதுக் கணக்குக் கமிட்டி அறிக்கை முழுவதையுமே வாதிக்கவேண்டுமென விரும்புவதாய் தெரிகின்றது. எனவே நிதி இலாக்கா மெம்பர் எடுத்துக்காட்டிய தலைவரின் முந்திய தீர்ப்பு இதற்குப் பொருந்தாது. பொது கணக்குக் கமிட்டி அறிக்கையைப்பற்றி வாதிக்க சபை ஓர் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சில மாகாணங்களில் நிதி இலாக்கா மெம்பர் பொது கணக்கு அறிக்கையை யோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமெனபிரேரேபிப்பதும், இது நிறைவேறினால் அதைஅங்கீகரிக்கவேண்டுமென்று பிரேரேபிப்பதும் அதன்பின்னர் எதிர் தீர்மானங்கள் பிரேரேபித்து அதை நிறைவேற்றவோ அல்லது மறுக்கவோ செய்வதும் வழக்கமாயிருக்கின்றது. இவ்வழக்கத்தையே இந்தியச் சட்டசபையும் பின் பற்றலாம். ஆனால் இக்கேள்வி திடீரென எழுந்துவிட்டமையால் நிதி இலாக்கா மெம்பருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டமான நிலைமையையும் அவர் திட்டமான யோசனை எதுவும் இன்று கூறக்கூடிய நிலையில் இல்லாமலிருப்பதையும் உணருகின்றேன். இன்று அதிகப்படியான கிராண்டு தீர்மானம் சபை முன்னிருக்கின்றமையால் இக்கூட்டத்தில் அப்புதிய முறையை ஏற்படுத்த முடியாது. நிதி இலாக்கா மெம்பரும் கட்சித்தலைவர்களுடன் கலந்து யோசிக்க வேண்டும். இக்கமிட்டி இச்சபையினால் சிருஷ்டிக்கப்பட்டதாகையினால் இதைப்பற்றி வாதிக்க சபைக்கு தருணமளிக்கப்படவேண்டிய சரியான முறையை சபை பின்பற்றும் காலம் கிட்டிவிட்டதென்று கருதுகின்றேன் (கரகோசம்)

கிராண்டு நிறைவேற்றம்

பின்னர் எல்லா அதிகப்படியான கிராண்டுகளையும் ஓட்டுக்கு விடப்பட்டது. அவைமேல்வாதமில்லாது நிறைவேறின. நிதிக்கமிட்டி ஒப்புக் கொண்டுள்ள உபகிராண்டுகளும் நிறைவேறின.

சங்கரநாயர் கமிட்டி கிராண்டு

திரு. குமார் கெங்கா நந்துசின்ஹா சைமன் கமிஷன் விசாரணை சம்பந்தமான ஹார்ட்டாக்கமிட்டி, சங்கரன் நாயர் கமிட்டி செலவு கிராண்டுகளை நீக்கிவிட வேண்டுமென பிரேரேபித்தார்.

இதற்கு ரூ: 302,000 கிராண்டு கேட்கப்பட்டிருந்தது. அவர் இவ்விரண்டு கமிட்டியும் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்க நியமிக்கப்பட்டுள்ளதென்றும், சபையோ அதனுடன் ஒத்துழையாமை செய்ய சென்ற பிப்ரவரிமாதத்தில் தீர்மானித்துள்ளதென்றும், சைமன் கமிஷன் கிராண்டையும் சபை தோற்கடித்துள்ளதென்றும், அதை கவர்ஜெனரலே தனது விசேஷ அதிகாரத்தால் அளித்துள்ளார் என்றும, லாகூர் லக்னோ விபத்துக்கட்கு பிறகாவது சங்கர நாயர் கமிட்டியினர் ராஜிநாமாச் செய்திருக்க வேண்டுமென்றும், ஆனால் அவர்கள் வெட்கமில்லாது இன்னுமிருக்கின்றனர் என்றும் கூறினர்.

கனம் திரு. கிரிரார் சென்டிரல் கமிட்டி மெம்பர்களைப்பற்றி திரு சின்ஹா கூறியதை கண்டித்தார். அக்கமிட்டி எவ்விதமான சந்தர்ப்பத்தில் நியமிக்கப்பட்டுள்ளதென்பது நன்கு தெரிந்ததே என்றும் கமிட்டி மெம்பர்கள் நாட்டிற்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார்களென்றும் (எதிர்கட்சியார் குரல்கள் அப்படியா, நகைப்பு) கூறினர்.

பண்டிட் மோதிலால் நேரு சைமன் கமிசன் நியமனம் நாட்டிற்கு அவமானமென்றும், பெருந்தன்மையான செய்கையற்றதென ஒன்றிருந்தால் அது இக்கமிட்டி நியமனந்தான் என்றும், இக்கமிட்டி சபையின் விருப்பத்திற்கு எதிரிடையாகவே நியமிக்கப்பட்டுள்ளதென்றும், அவர்கள் இச்சபையை அவமதித்து விட்டனர் என்று கூறுவது மிகையாகாதென்றும் கூறினர்.

பண்டிட் ஹிருதயநாத் குன்சுருவும் அதிகப்படியான தீர்மானம் முறையற்ற, அரசியல் அயோக்கியத்தனமா தென்று கூறினர்.

திரு. எம். எஸ். ஆனேயும் எதிர் தீர்மானத்தை ஆதரித்தார். தனது மாகாணம் ஹார்டாக் கமிட்டி முன் சாட்சியம் கொடுக்க தனது ஆபீசர்களை அநுமதிக்கவில்லை (கரகோசம்) என்றும் கூறினர்.

எதிர் தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டதில் ஆதரவாய் 47 ஓட்டுக்களும் எதிரிடையாய் 49 ஓட்டுக்களும் கிடைத்தமையால் அது தோற்றது. அதிகப்படி கிராண்டு தீர்மானம் நிறைவேறியது. சபை மறுநாள் கூடுவதாய் கலைந்தது.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது.)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும், பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,

(29-எப்) மைலாப்பூர், மதராஸ்.

பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது

மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்

(காலை 10-மணிக்கு)

„ டயிரியா 22 2-29

மதராஸிலிருந்து ஸ்ட்ரெயிட்ஸுக்கு கப்பல் பிரயாணம்

(மாலை 4-மணிக்கு)

„ ரோனு 20 2 29.

இதர விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

பின்னி & கோ, மதராஸ் லிமிடெட்

(4) ஏஜன்ட்ஸ் மதராஸ்

திராவிடன் குடி-அரசு பத்திரிகைகளை வாங்கி வாசியுங்கள்.

"பங்களார்கதா" ஆசிரியர் வழக்கு

காந்தி, ஜாவஹர்லால் நேரு சாட்சிகள்

கல்கத்தா, பிப் 18

"தற்கால விவகாரம்" என்னும் வியாசத்தை வெளியிட்டு இ. பி. கோ. 124 செக்ஷன்படி ராஜதுரோகம் செய்ததாக "பங்களர் கதா"வின் மாஜி ஆசிரியர் மீதும்திரு. சத்தியரஞ்சன பக்ஷி மீதும் அதை அச்சிடுபவரான திரு. சத்தியரஞ்சன்முக்கர்ஜி மீதும் தொடரப்பட்ட வழக்கு இன்று பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் திரு. ரக்ஸ்பரோ முன்பு விசாரிக்கப்பட்டது. அக்கட்டுரை டிசம்பர் 16-ந் தேதி வெளியிடப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் வக்கீல் திரு. ஜே. எம். சென்குப்தாவழக்கில் வாதியான இன்ஸ்பெக்டர் திரு. பி.டபிளியூ. முக்கர்ஜியை குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி:—பண்டிட் ஜாவஹர் லால் நேரு அந்தக் கடிதத்தை திரு. காந்திக்கு எழுதவில்லை என்று நீங்கள் மறுக்கின்றீர்களா?

பதில்:—அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது,

கே:—அந்த கடிதம் யௌவன இந்தியாவில் வெளிவந்துள்ளது உங்கட்குத் தெரியுமா?

ப:—எனக்குத் தெரியாது.

கே:—லக்னோவில் போலீசார்பண்டிட் ஜாவஹர்லால் நேருவை தாக்கினர் என்பதை இல்லை என்று உங்களால் மறுக்க முடியுமா?

ப:—அதுவும் எனக்குத் தெரியாது.

கே:—அவருக்கு முன்பின் தெரியாத ஒருவர் இரண்டு துப்பாக்கிகள் தருவதாய் கூறியது உங்கட்குத் தெரியவருமா?

ப:—எனக்குத் தெரியவராது.

கே:—போலீசார் ஒற்றர்கள் அமைத்துக்கொள்கின்றனர் என்பதை நீங்கள் மறுக்க முடியுமா ?

ப:—எனக்கு அதுபற்றி நேரில் ஒன்றும் தெரியாது.

கே:—போலீசார் வாலிபர்களை அமர்த்தி அவர்கட்கு ரிவால்வர் கொடுக்கும் வழக்கம் உங்கட்குத் தெரியுமா ?

ப:—தெரியாது. எந்த சமயத்திலாவது அவ்விதம் செய்ததும் எனக்குத் தெரியாது.

மொழிபெயர்த்துக் கூறுபவரையும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. திரு. சென்குப்தா தனது கட்சிகாரார் வழக்கு சட்டத்தின் விதிவிலக்கிற் குட்பட்டுத்தான் இருக்கின்றதென்றும், வாசகம் சிறிது பொறுமையிழந்த சொற்களில் ஆக்கப்பட்டிருக்கலாமென்றும், ஆனால் எல்லாம் கருத்தையும் வாசகத்தின் கடுமையையும் பொறுத்திருக்கின்ற தென்றும், திரு. காந்தியையும் பண்டிட் ஜாவஹர்லால் நேருவையும் பிரதிவாதிகள் சாட்சியாக தருவிப்பதற்காக மூன்று வாரங்கள் விசாரணையை ஒத்திவைக்கவேண்டுமென்றும் கேட்டார். விசாரணையை மார்ச்சு 14ந்தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கிராண்ட் ரிடக்ஷன் சேல்

இந்த இரண்டு கடிகாரங்களும் மொத்தமாய் வாங்கினால் ரூ. 7-8-0. தனித்தனியே ரூ. 9-8-0. பாக்கட் கடிகாரம் தங்கக்கூட்டில் சித்திர வேலைப்பாடுள்ளது ரூ. 4-8. தங்கமூடியுள்ள ரிஸ்ட் வாட்ச் அழகிய சைஸ் ரூ. 5. வி. பி. செலவு வேறு. 3வருட உத்தரவாதமுள்ளது. ஒவ்வொரு கடிகாரத்துடனும் 100 வருட காலண்டர் இனாம்.

Reliable Stores, 107 (D. R.)

386 Bowbazar Street Calcutta.

கப்பல் விஷயங்கள்.

துறைமுகத்திலிருக்கும் கப்பல்கள்.

19—2—29

பெயர்	போகும் ஊர்	புறப்படுந்தேதி பிப்ரவரி மாதம்
சாமேரியா	ரங்கூன்	21—
டேரியா	ரங்கூன்	22—
ஸிடி ஆப் கொரிந்த்	மார்சேல்	—
ஸிடி ஆப் பார்க	லண்டன்	—
மனோரா,	மார்சேல், லண்டன், ஆண்ட்வொாப். மிடில்ஸ்பரோ	—
ஸிடி ஆப் ஹெறிபோர்டு	நியூயார்க், போஸ்டன் பிலடெல்பியா	—
ரோனு	பினேங்கு சிங்கப்பூர்	20—
கோஹினூர்	பம்பாய்	19—
கோவரா	கல்கத்தா	—
மஹாட்	கல்கத்தா	—

போன் வெள்ளி வகையறா.

சவரன் 1-க்கு ——— ரூ. 13-7-3

சீமை கட்டி வெள்ளி . . ரூ 59-12-0

ரூ. 2,000 இனம்

இத்தகைய லாபகரமான வ... பாடு உங்களுக்கு கிடைப்ப... அரிது.

இதை தவற விடாதீர்கள்: இப்பொழுதே விபரத்துக்கு எழுதுங்கள்.

Ellams

டைப்ரைட்டர் காப்பிகளும் ரிப்பன்களும்

அடிசன் அண்டுகோ., லிமிடெட்,

பாக்ஸ் 308,

மவுண்டு ரோட்டு, மதராஸ்.

(196 பி)

வியாபார விஷயங்கள்.

நாணய மாற்றல்.

(19—2—29)

	விற்கிற விலை.	வாங்குகிற விலை
லண்டன் மேல் தந்தி	17 31/32 பெ.	
லண்டன் மேல் தரிசனம் 18 பெ.	18 3/32 பெ.	
லண்டன் மேல் 3 மாத தவணை உண்டி	18 11/32 பெ,	
லண்டன் மேல் 6 மாத தவணை உண்டி	18 19/32 பெ.	
பிரான்ஸ்-மேல் தரிசனம்— ரூ. 100-க்கு	925 ப்ராங்	
ஜெர்மனி மேல் தரிசனம் ரூ. 100-க்கு	151 மார்க்கு	
பெல்ஜியம் மேல் தரிசனம் ரூ. 100-க்கு	255 ப்ராங்	
அமெரிக்கா மேல் தரிசனம்— 100 பொன் டாலருக்கு	ரூ. 276	ரூ. 272
பினேங், சிங்கப்பூர் மேல் தரிசனம்— 100 டாலருக்கு	ரூ. 160	ரூ. 155
ஹாங்காங்மேல் தந்தி அல்லது தரிசு 100 டாலருக்கு	ரூ. 140	
ஷாங்காய் மேல் தந்தி அல்லது தரிசன- 100 டயிலுக்கு	ரூ. 180	
ஜப்பான் மேல் தந்தி அல்லது தரிசனம்- 100 பென்னுக்கு	ரூ. 126	
ஜப்பான் மேல் 60 நாள் டி. பி. 100 பென்னுக்கு		ரூ. 120
ஜாவாமேல் தந்தி அல்லது தரிசனப்— ரூ. 100-க்கு	90 கில்டர்	92 கில்டர்
இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா கடப்பு வட்டி—	8%	
பாங்க் ஆப் இங்கிலாந்து வட்டி	5½%	

சர்க்கார் பத்திரங்கள்.

3% இந்தியா சர்க்கார் பத்திரங்	ரூ. 72-1 முதல்	73-1
4% கடன் (1960-70	ரூ. 84-2	ரூ. 85-2
5% யுத்தக் கடன் (1929-47)	ரூ. 99-2	ரூ. 100-2
% கடன் (1945-55)	ரூ. 103-12	ரூ. 104-12
5% இந்திய சர்க்கார் வாண்டுகள் 1933	ரூ. 100-8 முதல்	101 8
6% கடன் 1930	ரூ. 100-14	ரூ. 101-14
6% இந்தி சர்க்கார் பாண்டுகள் 1931	ரூ. 101-14	ரூ. 102-14
6% கடன் 1932	ரூ. 102-14	ரூ. 103 14

தீர்மானம்.

6¼% மைசூர் சர்க்கார் கடன் (1940)	ரூ. 112 முதல்	ரூ. 112 8
6½% மைசூர் சர்க்கார் கடன் (1941-51)	ரூ.116	ரூ.116-8
7% மைசூர் சர்க்கார் கடன் (1931)	ரூ.	ரூ. 104-8
இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா (ரூ. 500)	ரூ. 1420 முதல்	ரூ. 1430
இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா ரூ. (125)	ரூ. 347-8	ரூ. 352-8

வெளிநாட்டுச் செய்தி

வெறிகொண்ட ஓனாய்கள்

1 சிப்பாய்கள் இரையாயினர்.

ரோம், பெப்ருவரி, 18

...ல்பானியாவில் குளிரினால் இரை ...யாத ஓனாய்கள் ஒரு சிப்பாய் படை ...த்தாக்கி 11 பேரைக் கொன்று விட் ... புதிதாய் பட்டாளத்தில் சேர்ந்த ...தொகை ஆட்களும் இரண்டுசிப்பாய் ...ம் பிரிமிட்டி, கோரிட்ஜா என்னுமி ...களுக்கிடையில் போய்க்கொண்டிருக் ...யில் 50 ஓனாய்கள் அவர்களை வந்து ...ந்துகொண்டன. அந்த இரண்டுசிப்பா ...ரிடம் மாத்திரம் துப்பாக்கிகள் இருந்த ... அவர்கள் அந்தஓனாய்களின்மேல் துப் ...கிப் பிரயோகம் செய்து எழு ஓனாய் ...க் கொன்றனர். அதற்குமேல் துப் ...கிப் பிரயோகம் செய்வதற்கு அவர் ...ம் குண்டுமருந்து இல்லாமல்போய் ...து. அதனால் ஓனாய்கள் அவர்களை ...து தாக்கின. புதிய படையாளரில் ... மரங்களில் ஏறித் தப்பித்துக் ...ண்டனர். ஆனால் ஓனாய்கள் அவர் ...ல் 11 பேரை கீழே இழுத்துப் ...ட்டு தின்றுவிட்டன.

...ருஸ்ஸல்ஸில் தீவிபத்து

50 லட்சம் பிராங் சேதம்

புருஸ்ஸல்ஸ், பெப்ருவரி, 17

...ர்விராய் என்னுமிடத்திலுள்ள நீர் ...யங்களிலெல்லாம் தண்ணீர் உறை ...போய்க் கிடக்கிறது. அதற்கு சமீபத் ...ள்ள மண்கலத் தொழிற்சாலையில் ...பத்து ஏற்பட்டு 40 அல்லது 50 ...சம் பவுன் நஷ்டமேற்பட்டிருப்பதாக ...ல்லப்படுகிறது.

...தேச மன்னர் தீர்மானம்

...ட்டிஷ் பத்திரிகைகள் கருத்து

லண்டன், பெப்ருவரி, 16

...ந்திய சுதேச மன்னர் தீர்மானத் ...ப் பற்றி டெய்லி டெலிகிராப் பத்தி ... எழுதியிருக்கும் ஓர் தலையங்கத்தி ... இந்தியாவின் தற்கால ராஜீய நிலை ...யில் சுதேச மன்னர்கள் விஷமத்தன ...ன தேசிய கிளர்ச்சியை ஆட்சேபித்து ...மானித்ததானது பெரிதும் கவனிக் ...படத்தக்கது என்று எழுதியிருக்கி...

"டைம்ஸ்" கருத்து

லண்டன், பெப்ருவரி, 18

...ந்திய மன்னர் கருத்தைப்பற்றி 'டை... ' பத்திரிகை எழுதியிருக்கும் ஒரு ...யங்கத்திலே, இந்திய சுதேச மன் ... தீர்மானமானது அமிதவாதிகள் ...லாசனையையும், சர்க்காரை ஆதரிப் ... அல்லது ராஜியப் புரட்சி கிளர்ச்சி ... ஆட்சேபிப்பதா என்று ஒரு முடி ...க்கு வர முடியாமல் தத்தளிக்கிற மித ...களையும் கண்டிப்பதாகும். சுயேட் ... கட்சியார் தங்கள் ராஜீயப் புரட்சி ...லைகளை எதிர்க்காமல் எதிர்க்கிற ...றகளை கையாடுகிறார்களென்பது ...மைதான். ஆனால், பொது ஜனங்கள் ...கிரக் கொண்டிருக்கும் போது ...ர்கள் பாதகச் செயல்கள் செய்வதை ... காந்தி மிகவும் வல்லமையுள்ளவரா ...ந்த காலத்திலேயே தடுக்க முடியா ... போய்விட்டதென்பதை கவனிக்கும் ...து இந்த கிளர்ச்சிக்காரர் உறுதி ...ழியால் ஒரு பயனுமில்லை. என்று ...ரிப்படுகிறது.

...துவுமன்றி கிளர்ச்சிக்காரர்கள் இந்திய ...காரை குறை சொல்லும்போது முத ...தாக இந்திய மன்னரையே தாக்கு ...ர்களென்பதையும் இந்த சமஸ்தா ...பதிகள் அறிந்திருக்கிறார்கள் என்று ...துகிறது.

ஆப்கன் நிலைமை

துருக்கி ஸ்தானாதிபதி மத்தியஸ்தமா?

லண்டன், பெப்ருவரி, 18

...ப்கானிஸ்தானத்திலிருக்கும் துருக் ...னாதிபதியான கியாஜிம் பாஷா ஆப் ... கலகத்தை நிறுத்தும் நோக்கமாக ...றல்லாவின் சார்பாக பாச்சா சாக் ... விடம் மத்தியஸ்தம் பேசுகிறதாக ...ஸ்டான்டி ஷேபிளிலிருந்து வந்த ...செய்தி கூறுகிறது.

...ஸ்பானிய கலக விளைவு

...ரசருக்கும் சர்வாதிகாரிக்கும் தகராறு

பாரிஸ், பெப்ருவரி, 18

...ட்ரிடிலிருந்து வந்த ஒரு செய்தி ...வதாவது:—

...டிரீலில் கலகவிஷயமாக அல்பன் ...அரசருக்கும் டிரிவேராவுக்கும் ப... அபிப்பிராயபேதம் ஏற்பட்டதாக தெரிகிறது. அந்தச் சதியோசனையில் சம்பந்தப் பட்டவர்களுக்கு இரக்கம் காட்டவேண்டுமென்ற ஆல்பன்சோ அரசர் விரும்பினதாயும், அப்படி செய்தால் அரசாங்கம் பலவீனப்பட்டுப் போனதாக நினைப்பார்களெனக் கூறி டி ரிவேரா மறுத்ததாகவும், அரசர் இரக்கம் காட்டவேண்டியது தான் என்று வற்புறுத்தினதாகவும், உடனே டி ரிவேரா ராஜினாமாசெய்துவிட்டதாகவும், மந்திரி சபையாரும் ராஜீனாமா செய்து விட்டதாகவும் அதன் மேல் ஆல்பன்சோ இரக்கம் காட்டவேண்டுமென்ற தீர்மானத்தை விட்டுக்கொடுத்து டி ரிவேரா மந்திரி சபையே அவர்கள் இஷ்டம்போல அரசு நடாத்தும்படி சொல்லிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

லட்சாதிபதி மகன் கொலை

பைத்தியக்காரன் செய்த பாதகம்

நியுயார்க், பெப்ருவரி, 18

எண்ணெய் கம்பனி கோடீஸ்வரனான திரு. இ. எல். டொஹேனியின் குமாரனான எட்வர்ட் என்பவர் அவருடைய வீட்டிலே ஹியுபிளங்கட் என்ற காரியதரிசியினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். திரு. ஹியுபிளங்கட்டுக்கு சித்தப்பிரமை ஏற்பட்டிருந்தது. ஹியுபிளங்கட் என்பவர் எட்வர்டைச் சுட்டுக்கொன்ற பிறகு தற்கொலை செய்துகொண்டான். திரு. இ. எல். டொஹேனி 1924ல் நடந்த "டிபாட்டோம்" தோட்டவிஷயமாய் ஏற்பட்ட பணமோசடி புகாரில் சம்பந்தப்பட்டிருந்தார். அதில் இப்போது கொலையுண்ட திரு. எட்வர்ட் அவருடைய தகப்பனாரிடமிருந்து ஒரு லட்சம் டாலர் வாங்கிக்கொண்டு போய் உள்நாட்டுக் காரியதரிசி திரு. பாலுக்குக் கொடுத்ததாகச் சொல்லப்பட்டது.

பம்பாயில் கலகம்

லார்ட்வின்டர்டன் கூறிய விபரம்

லண்டன், பெப்ருவரி, 18

பம்பாய் கலகத்தைப்பற்றி பார்லிமெண்டில் திரு. வார்டா மில்லன் கேட்ட கேள்விக்கு பதிலாக லார்ட் வின்டர்டன் பம்பாய் சர்க்காரிடமிருந்து வந்த நீண்ட தந்திகளைப்படித்து காண்பித்து பின் வருமாறு கூறினார்:—ஆலைத்தொழிலாளர் வேலைநிறுத்தக் கூட்டங்களை பட்டாணிகள் கலைத்து விட்டதாகத் தெரியவில்லை.

போலீஸ் கணக்குப்படி பார்த்தால்பட்டாணியர்கள் மிகவும் குறைந்த தொகையான பாதகங்களே செய்திருப்பதாகத் தெரிகிறது.

பிறகு திரு. வெல்லாக் கேட்ட கேள்விக்கு, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்குப் பதிலாக பட்டாணியர்களை ஏன் நியமிக்கக்கூடாதென்று தெரியவில்லை. நியாயமான வேலைகளை ஜனங்கள் செய்யாதபடி தடைசெய்ய இந்தியாவில் சட்டம் கிடையாது. வேலை நிறுத்தம் செய்திருக்கிற தொழிலாளருக்கு பதிலாக புதிய ஆட்களை இந்திய சர்க்கார் தருவித்துக் கொடுப்பதாகவோ அல்லது அப்படித் தொழிலாளர்களை தருவிக்க உதவி செய்கிறதாகவாவது எவ்வித பேச்சுமே கிடையாது என்று கூறினார்.

திரு. வெல்லாக்:-ஒரு மதத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு பதிலாக இன்னொரு மதத்தைச் சேர்ந்தவர்களை நியமிப்பது அபாயகரமான தல்லவா?

லார்ட் வின்டர்டன்.—அப்படியல்லவென்று பதிலளித்தார்.

திரு. வார்டா மில்லன் பின்னும் கேட்ட கேள்விக்கு பதிலாக பட்டாணிகள் பல வருடங்களாகப் பம்பாயில் வசித்து வருகிறார்களென்றும் சட்டத்துக்கு அடங்கிய குடிகளென்றும், பட்டாணிகள் இதுவரையில் மற்ற ஜனங்களுக்கு கோபமூட்டத்தக்க விதமாய் நடந்துகொள்ளவில்லையென்றும், அதற்கு மாறாக அவர்கள் வேலையிலிருந்து போகும்போது வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களால் கல்லாலடிக்கப்பட்டதாகவும் கூறினார்.

---

3 ஆம் ஆண்டு! 3 ஆம் ஆண்டு!!

மாருதி

ஆசிரியர் காந்தி சோதிடர் V. K. சடகோபாச்சாரியார் சோதிட விஷயங்களுடன் வெளிவரும் மாதப் பத்திரிகை இதுவே. ராஜீய விஷயங்கள், நீதிக்கதைப் பகுதி, பல கட்டுரைகளுடன் வெளிவரும். 'ஆயுர்தாய தர்ப்பணம்' என்கிற அருமையான கிரந்தம் வெளிவருகிறது. இன்றே சந்தாதாரராக சேருங்கள். மாதிரி பத்திரிகை விரும்புவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

	உள்நாடு.	வெளிநாடு.
ஒரு வருட சந்தா	ரூ. 3-0-0.	ரூ. 3-4-0

மானேஜர்:-"மாருதி" காரியாலயம்,
(107 பி) திருத்தணி, சித்தூர் ஜில்லா

சைமன் கமிஷன் விஜயம்

பகிஷ்காரக்காரர் ஜபம் பலிக்கவில்லை

திருப்திகரமான போலீஸ் ஏற்பாடுகள்

சென்னை, பிப்ர, 19

நேற்று காலை 8 மணிக்கு சர். ஜான் சைமனும் மற்றும் கமிஷன் மெம்பர்களும் இந்தியா சட்டசபையினால் தெரிந்தெடுக்கப்பட்ட மத்திய கமிட்டி மெம்பர்களும் அக்கமிட்டியின் தலைவர் சர் சங்கரன் நாயர் அவர்களும் ரங்கூனிலிருந்து டெய்ரியா என்னும் கப்பலில் சென்னை வந்திறங்கினர். அவர்களை துறைமுகத்தில் ஆடம்பரமாக வரவேற்று பல உபசாரப்பத்திரங்களும் வாசித்துக்கொடுக்கப்பட்டன. (இவ்விவரம் நேற்றே வெளியாயிருக்கிறது) பத்திரங்களுக்குப் பதிலளித்து சர் ஜான் சைமன் பேசியபின் சிறிது நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தபின் கமிஷனர்கள் கவர்னர் மாளிகைக்குச் சென்றனர். துறைமுகத்தை யடுத்த ரஸ்தாக்களிலும் ரயில்வே லைன்களிலும் பல போலீஸ் கான்ஸ்டேபிள்கள் காவல் வைக்கப்பட்டிருந்தனர். கமிஷனர்கள் சந்தோஷமாய் துறைமுகத்திலிருந்து கவர்னர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஹர்த்தால் பிரசாரம்

சென்றவாரமுழுதும் தினந்தோறும் பகிஷ்காரக் காரர்கள் நகரில் பல விடங்களிலும் கூட்டங்கள் கூட்டி கமிஷனைப் பகிஷ்கரிக்கும்படிக்கும் கடைகள் மூடியும் தொழில் நிறுத்தம் செய்தும், வண்டி வாகனங்கள் முதலியவை கமிஷன் சென்னைக்கு வரும் தினத்தன்று போகாமல் நின்று தெருக்கள் எல்லாம் வண்டிப் போக்குவரத்தில்லாமல் கோரமான தோற்ற மேற்படச்செய்ய வேண்டுமெனத் தீவிர பிரசாரம் செய்துவந்ததுடன் தொழிலாளிகளையும் மற்றையோரையும் அன்று தொழில் நிறுத்தும்படியும் விண்ணப்பித்துக் கொண்டனர். ஆயினும் நேற்று நகரைச் சுற்றிப் பார்த்தவர்களுக்கு பகிஷ்காரக்காரர் போட்ட கூச்சல் பலிக்கவில்லை என்று தான் தோன்றுமென்பதில் சந்தேகமில்லை. காலையில் சென்ற வருடத்துத் தீமைகளை மறக்காதிருக்கும் கடைக்காரர்கள் பலர் போக்கிரிகளின் தொல்லைகளுக்குப் பயந்து கடைகளைத் திறக்கத் தயங்கியபோதிலும் நேரமாக ஆக காலை பத்து பதினொரு மணிக்குள் எங்கும் பல கடைகளும் கம்பெனிகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. காலையில் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி தேவஸ்தானத்திற்குட்பட்டுள்ள கொத்தவால் சாவடியில் கடைகள் திறந்துவைக்கப்படாமலிருந்த போதிலும் மூர்மார்க்கட்டு வழக்கம்போல திறந்து வைக்கப்பட்டு அன்றாடம் வாங்கும் சாமான்கள் தவக்கமின்றி விற்பனை செய்யப்பட்டு தான் வந்தன. நிற்க, தெருக்களில் வண்டிப் போக்கு வரத்தில்லாமல் கோரமான தோற்றமேற்படச் செய்யவேண்டுமென்று பகிஷ்காரக்காரர்கள் எவ்வளவு விண்ணப்பித்திருந்தும் அவர்கள் ஜபம் பலியாது டிராம் வண்டிகளும் பஸ்களும் மற்றும் குதிரை, மாட்டு, ஜட்கா வண்டிகளும் ரிக்ஷா முதல் சகல வண்டிகளும் வழக்கம்போல் போய் வந்து கொண்டுதானிருந்தன. துவக்கத்தில் சென்ற வாண்டு சம்பவங்களின் மூலமான பயத்தினால் ஏதோ சில கடைக்காரர்கள் கடைகளைத் திறக்க மயங்கிக்கொண்டிருந்தாலும் நேரம் செல்லச் செல்ல வெற்றிலைக்கடைகளும் மற்ற கடைகளும் திறக்கப்பட்டன. திருவல்லிக்கேணியில் டீ கடைகளும் மற்றும் பல கடைகளும் மூடப்படாமல் திறந்துவைக்கப்பட்டிருந்தன. பகிஷ்காரக்காரர் பிரசாரம் பலன் பெறாது ஹர்த்தால் பெருந்தோல்வி யடைந்ததென்பது நன்கு விளக்கப்பட்டது.

பகிஷ்கார ஊர்வலம்

பகிஷ்கார ஊர்வலம் செல்வதாகத் திட்டம் செய்யப்பட்டிருந்த வழிகளில் செல்ல முடியாமல் திண்டாடிப்பினனர் போலீசார் காவலுடன் தாம் முடிவில் போய்ச் சேருவதாகக் குறிப்பிட்டிருந்த விடத்தை யடைந்தது. பகிஷ்கார ஊர்வலத்தில் பெரும் பாலும் இந்துக்களும் முக்கியமாய்ப்பார்ப்பன அம்சமுந்தான் மிகுதியாயிருந்ததுடன், இங்கு மங்கும் சிற்சில முஸ்லிம்களுமிருக்கக்காணப்பட்டனர். அவ்வூர்வலத்துடன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தசில பிரபலஸ்தர்களும் சென்றனர் சிந்தாதிரிபேட்டையை யடுத்த நேப்பியர் தோட்டத்தில் குழுமிய பகிஷ்காரக் கோஷ்டியார் சைமன் திரும்பிப்போ என்ற எழுத்துப் பொறித்த கொடிகள் கச்சைகள் சில வற்றுடனும் சில கருப்புக்கொடிகளுடனும் புறப்பட்டனர். முன்னர் சொல்லிக்கொள்ளப்பட்டபடியே அவர்கள் பாதுகாப்பு விரும்பியது போல் போலீஸ் கமிஷனரால் பந்தோபஸ்தளிக்கப் பட்டிருந்தது.

ஊர்வலம் நேப்பியர் பார்க்கிலிருந்து புறப்பட்டு வில்லிங்டன் வாராவதி மூலமாய் மன்ரோசிலைரஸ்தா வழியே சென்று வாலாஜா வாராவதியைக் கடந்து பஸ்பக்கமாய்த் திரும்பி பழைய பாண்டு வாத்தியம் வாசிக்குமிடத்தருகில் கடற்கரையில் கூட்டம் கூட்டுவதாக அறிவிக்கப்பட்டிருப்பினும் அவ்வழிகளில் செல்ல முடியாமல் போலீஸ் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்ட வேறுவழிகளில் தான் போக வேண்டியதாயிற்று. காலை 7—15 மணிக்கு பகிஷ்கார கோஷ்டியார் ஊர்வலம் நேப்பியர் தோட்டத்திலிருந்து புறப்பட்டு மௌண்ரோடுமூலமாய் வாலாஜாரோடுக்குச் சென்று சேப்பாக்கத்தில் நுழைந்து தெற்குக் கடற்கரை யோரமாய் குறித்த விடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. ஊர்வலத்துடன் இருபக்கங்களிலும் போலீசார் அணிவகுத்துச் சென்றனர். வழிநெடுக ஊர்வலக் கோஷ்டியார் பாரதி பாடல்களைப் படிக்கொண்டும் ஜேகோஷமிட்டுக்கொண்டும் சைமன் திரும்பிப்போ என்ற கூச்சலுடனும் சென்றனர்.

கடற்கரையில் கூட்டம்

ஊர்வல கோஷ்டியார் கடற்கரையில் குறித்தவிடம் போய்ச் சேர்ந்ததும் வழக்கம் போல ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தலைமையில் கூட்டம் கூட்டிப் பேசினார்கள் அக்கூட்டத்தில் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், பிரகாசம், சத்தியமூர்த்தி, ரங்கனாத முதலியார், கே. வி. ஆர். சாமி, காளேஸ்வரராவ், செத்தா ரங்கய்ய நாயுடு முதலான சிலர் பேசியபின் கூட்டம் கலைந்தது.

சட்ட கலாசாலை மாணவர்

சென்ற வருடத்தைப் போலவல்லாமல் நேற்று சட்டகலாசாலை மாணவர்களில் நூற்றுக்குத் 95 வீதமானவர்கள் தங்கள் வகுப்புக்குச்சென்றிருந்தனர். வழக்கம் போல பாடங்களும் முறைப்படி நடத்தப் பட்டதும் இவ்வருடம் சட்ட கலாசாலை மாணவர்களும் மற்றைய கலாசாலை மாணவர்களும் பகிஷ்காரக் கூச்சலில் மயங்காமல் நிதான புத்தியுடன் நடந்து கொண்டது முக்கியமாய்க் குறிப்பிடத் தக்கது.

போலீஸ் ஏற்பாடுகள்

மொத்தத்தில் நேற்று சைமன் விஜயம் சம்பந்தமாக நகரவாசிகள் பயந்தது போல எத்தகைய அசம்பாவிதமான சம்பவங்களுமின்றி எங்கும் அமைதியாக தினப்படி நடக்கும் வேலைகளும் மிகவும் திருப்திகரமாக நிறைவேறியது எச்சரிக்கையான போலீஸ் ஏற்பாடுகளை முன்னிட்டதெனச் சொல்லுதல் மிகையாகாது. பாராட்டத் தக்கவாறு போலீஸ் கமிஷனர் முன்னுணர்வுடன் தேவைக்கேற்றவாறு தக்க போலீஸ் பந்தோபஸ்து வைத்து பகிஷ்காரக் கோஷ்டியாருக்கும் பாதுகாப்பளித்து அவர்களைக் கடற்கரை கொண்டுபோய்ச் சேர்த்ததும் குறிப்பிடத் தக்கது.

கார்ப்பொரேஷன் தலைவர் விருந்து

இம்மாதம் 21ந் தேதி வியாழக்கிழமை மாலை 4-45மணிக்கு சர்ஜான் சைமனுக்கும் மற்றும் கமிஷன் மெம்பர்களுக்கும் சென்னை கார்ப்பொரேஷன் தலைவர் திரு. எ. ராமசாமி முதலியார் அவர்களால் வில்லிங்டன் கிளப்பில் தோட்ட விருந்தொன்று நடத்திவைக்கப்படும்.

சைமன் கமிஷன் பகிஷ்காரம்

(ஒரு நிருபர்)

கருப்புக் கொடியே காணோம்.

சென்னை, பிப், 19

நான் வெளியூர் சென்று நேற்று காலை சுமார் பத்து மணிக்கே சென்னை நகர் வந்தேன். கமிசன் பகிஷ்காரம் எவ்விதமிருக்கின்றதென்று நான் சில விடங்களில் சென்றுபார்த்தேன். நான் சென்ற இடங்களில்ஓரிடத்திலாவது ஒருகருப்புக் கொடியேனும்காணப்படவில்லை. மேடை வீரர்கள் ஆபீசான மவுண்ரோட்டிலிருக்கும்காங்கிரஸ் ஆபீசிலும்கூட ஒருகருப்புக் கொடியாவது பறக்கவில்லை. மவுண்ட் ரோட்டில் வெற்றிலைப்பாக்கு கடைகளும் ஐரோப்பிய வியாபார ஸ்தலங்களும் திறக்கப்பட்டிருந்தன. மண்ணடியில் எல்லா பார்ப்பனரும் கடைகளைத் திறந்துவைத்திருந்தனர். வெற்றிலைப் பாக்கு கடைகளெல்லாம் திறக்கப்பட்டிருந்தன. சைனாபஜாரிலும் எல்லா வெற்றிலைப்பாக்குக் கடைகளும் திறக்கப்பட்டிருந்தன. பூக்கடை போலீஸ்டேஷன் அருகில் பழைய போஸ்டாபீஸ் இருந்த இடத்தில்இருக்கும்காப்பிக்கடையில்ஒரு கதவை திறந்துவைத்துக்கொண்டு ஒருவரிருவராக உள்ளேவிட்டுகொளுத்தபணம் சம்பாதித்து விட்டனர். இதுவும் பார்ப்பனர் ஹோட்டல் தான். நான் சிலரிடம் பகிஷ்காரம்சம்பந்தமாய் பேசியதில்அவர்கள் கலகத்திற்குப் பயந்தே கடைகளை மூடிவிட்டதாய்தெரிவித்தார்கள்கருப்புக் கொடி பிடிப்போம் சைமனை திருப்பி வெருட்டிடுவோம் ஆர்ப்பாட்டம் செய்திடுவோம் என்ற வாய்ச்சொல் வீரர்களெல்லாம் நேற்று இவ்வூரிற்றானிருந்தார்களோ என்று சந்தேகிக்கும்படியாகவே தோற்றமிருந்தது. நேற்று கடையை மூடியவர்களெல்லாம் காங்கிரசார் காலித்தனம்செய்தால் என்ன செய்வதென்று பயந்தே கடைகளை மூடிவிட்டனர் என்பதும் பகிஷ்கார தத்துவத்தைத்தெரிந்து மூடியவர்களல்லவென்பதும், இவ்வீரர்கள்நேற்று ஓடிப்பதுங்கிக் கொள்வரென்பது தெரிந்திருந்தால், கடைகளை மூடியிருக்க மாட்டார்களென்பது வெள்ளிடை மலைபோல் தெரிகின்றது. எனவே, சென்னையில் பகிஷ்காரம் பெருந்தோல்வியே என்பதில் சந்தேகமில்லை.

திருநெல்வேலியில் பெருந்தீ

8 வீடுகள் பற்றி எரிந்து போயின

சுமார் 2000 ரூபாய்க்குச் சேதம்

திருநெல்வேலி, பிப் 19

திருநெல்வேலியைச்சார்ந்த திம்மராஜபுரத்தில் நேற்றுக்கு முந்தியநாள் ஞாயிற்றுக்கிழமையன்று தீப்பிடித்து 8 வீடுகள் பூரணமாகப்பற்றி எரிந்துபோயின. சேதம் 2500 ரூபாய்க்கு மதிப்பிடப்படுகிறது. சப் இன்ஸ்பெக்டர் நாகையா இன்னும் தீ பரவா வண்ணம் தீயை அணைத்தார். தீப்பிடித்தக்காரணம்சரியாகத்தெரியாவிட்டாலும் பகையின் மீதே அவ்வாறு செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றுசந்தேகித்து, போலீசார் பூலா தேவன், ராமச்சந்திரதேவன் ஆகியவர்களையும் இன்னும் இருமறவர்களையும் கைது செய்துவிட்டனர். மேலும், போலீசார் விசாரணை புரிந்துவருகின்றனர்.

ஜனோபகாரிநிதி பாங்கில் மோசம்.

செப்புச்சங்கிலிக்கு 150 ரூபாய்.

சேலம், பிப்ரவரி 19

அம்மாபேட்டை கள்ளுக்கடைக்காரனான கந்தசாமிச் செட்டியார் என்பவன் ஒரு சங்கிலியை ஜனோபகாரி நிதிபாங்குக் கொண்டுவந்து அதை வைத்துக் கொண்டு 150 ரூபாய் கடன் கொடுக்குமாறு கேட்டார். பாங்க் அதிகாரிகள் பணம் கொடுக்க ஏற்பாடுகள் செய்துக் கொண்டிருக்கையில் அங்கு வந்த ஒருவர் அந்நகையைக் கண்டு சந்தேகங்கொண்டு எச்சரித்துவிடவே போலீசாருக்குத்தகவலறிவிக்கப்பட்டு போலீசார் அவனைக்கைது செய்தனர். அவன் அந்த சங்கிலி தங்கத்தினால்செய்யப்பட்டது என்று சொன்னான். ஆனால் அது சுத்தமான செம்பினால் செய்யப்பட்டு தங்க மெருகிடப்பட்டதாகும்.

தபால் பை களவு

டண்டா—அக்பர்பூர் ரோடில் கொள்ளை

தபால் வண்டிக்காரன் கொலை செய்யப்பட்டான்

லக்ஷ்மணபுரி, பிப்ரவரி, 18

பைசாபாத் ஜில்லாவைச் சார்ந்த டண்டா-அக்பர்பூர் ரோடில் சனிக்கிழமை இரவு நேர்ந்த தபால் பை களவு சம்பந்தமான விவரங்கள் தற்போது நமக்குக்கிடைத்துள்ளன. அதாவது தண்டா என்னுமூர்நல்லவியாபாரஸ்தலமாகையால்அங்கு இன்ஷியூர்முதலியவைகள்செய்யக்கூடிய தபாலாபீஸ் ஒன்று இருந்தது. அதில் அநேக பார்சல்களும், இன்ஷியூர் பார்சல்களுமாக 15000ரூபாய்வரை இருந்தவைகளுக்குமாக மாதிக்கொண்டிருக்கும். சனிக்கிழமையன்று தபால் பை தபால் வண்டிக்காரனிடம் கொடுக்கப்பட்டவுடன், அவன் தபால் வண்டியில் வேறு இருவரை ஏற்றிக்கொண்டு உடனேபுறப்பட்டுவிட்டான். முக்கால் பகுதிதூரம் வண்டி சென்றவுடன் உள்ளேயிருந்த இருவரும் வண்டிக்காரனை மூர்ச்சையாகுமாறு அடித்து வீழ்த்திவிட்டு அவனை வண்டியினுள்போட்டு அவ்வண்டியை அக்பர்பூரை நோக்கி விரட்டிவிட்டு தபால் பையை எடுத்துக்கொண்டோடி விட்டனர். அந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் தினந்தோறும் அக்பர்பூருக்குத் தபால் பை எடுத்துக்கொண்டு போய் வழக்கமாதலால் வண்டியோட்டி இல்லாதிருந்தும் வழக்கப்படி அக்பர்பூர் தபாலாபீஸுக்குச் சென்று நின்றது. உடனே பார்க்கையில் வண்டியில் உள்ளே டிரைவர் சித்த சுவாதீனமற்றுக் கிடக்கக் கண்டு அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்தேகினர். அங்கு அவன் காயங்களின் அதிர்ச்சியால் மரண வாக்கு மூலம் கொடுத்து விட்டு இறந்து விட்டான். போலீசார் ஆராய்ச்சி செய்து வந்ததில் அந்த தபால் பை ரிஜிஸ்டர் செய்த கடிதங்களுடனும், சாதாரண கடிதங்களுடன் அக்பர்பூர்-காதேசி ரயில்வேலனில் போடப்பட்டிருந்தது. அதிலிருந்த இன்ஷியூர் செய்த பார்ஸல்கள் காணப்படவில்லை. போலீசார் மேலும் விசாரித்து வருகின்றனர்.

காரைக்கால் சந்தாதார்களுக்கு அறிவிப்பு

காரைக்கால் பேரில்லா முடுக்கு வீதி 3-வது நெம்பர் வீட்டில் வசிக்கும் மு. அ. மு. ஷேக் அப்துல் காதர் சாகிப் அவர்கள் 20—2—29 தேதி முதல் நமது திராவிடன் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டு அவருடைய விலாசத்திற்கு பத்திரிகைகள் அனுப்பப்பட்டு வரும். நண்பர்கள் இனி ஏஜண்டினிடமே சந்தா செலுத்திப் பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

மானேஜர்.

திராவிடன்

சென்னை, 1929 பிப்ரவரிமீ 19

ராவ்பகதூர் எம். கே. ரெட்டியாரவர்களின் உயருரை

நம் சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் ஆற்றிய சொற்பெருக்கைச் செவியுற்றோர் அனைவரும், அதன் அருமை பெருமையினை என்ஞான்றும் மறக்கமாட்டார் என்பது திண்ணம். இப்பெருந் தகையார் உயரிய அறிவிற்கும் முதிர்ந்த பயிற்சிக்கும் ஏற்ப, இவ்வுரையில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும், சிறந்த ஆணித்திறமான படிப்பினைகள் தெளிவுறப் பொலிந்து கிடக்கின்றன வென்று நாம் கூறுவது மிகையாகும். செம்பாகமான நடையில் ஆழ்ந்து பரவிய கருத்துக்களை தெள்ளத் தெளிய அமுதம்போல் நம்மவர்கட்குப் புகட்டி யிருக்கின்றார். இதுவரையில் சிற்சிலருக்குற்ற சந்தேக விபரீதங்களையும் மிகச் செவ்வையுறத் தம் முறையில் களைந்து, சுயமரியாதையின் அடிப்படையான கொள்கைகளைப் பற்றியும் லக்ஷியங்களைப் பற்றியும் அவைகளால் விளையும் பயன்களைப் பற்றியும் அங்கையின் நெல்லியென நம்மவர்க்கறிவுறுத்தியிருப்பது இது சமயத்தில் ஏற்புடைத்தாகும். உண்மை நிலைமையை தனது நுட்பமான அறிவினால் தெளிந்து, நிலைமைக்கு ஒப்ப, சந்தர்ப்பத்திற்கு அவசியமான, பல அரிய விஷயங்களை இப்பெரியார் எடுத்துக் காண்பித்திருப்பதற்கு நாமனைவரும் கட்டாயமாக நன்றி பாராட்டக் கடமையுற்றவர்களாகின்றனம்.

"சுயமரியாதை என்னும் பதம் எளிதில் விளங்கக் கூடியதாய் இருப்பினும்......ஆழமான உட்கருத்துகளைக் கொண்டிருக்கின்றது. ஒரு தனிப்பட்ட மனிதரோ சமூகமோ இயற்கையிலேயே எவ்வித கட்டுப்பாடும் தடையுமின்றி முன்னேறுவதற்கேதுவான எல்லா சந்தர்ப்பங்களும் உரிமைகளும் உண்டென்பதை இவ்வியக்கம் ஒப்புக்கொள்ளுவதுடன், மனிதனுடைய ஆன்ம வளர்ச்சி குன்றுவதற்கநுகூலமான ஆபாச காரியங்களனைத்தையும் கண்டிக்கின்றது. சுயநலப் பற்றுள்ள ஒரு தனிப்பட்ட வகுப்பார் மட்டும் அவர்கள் கையில் எல்லா அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு மற்றவர்கள்மீது ஆதிக்கத்தைச் செலுத்தத் தலைப்பட்ட போது, அதற்கு விரோதமாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை ஏற்பட்டிருப்பது போல, பொது நன்மை நிமித்தம் சுயேச்சையாகச் சிந்தனை செய்யவும், சிந்தனைப்படி நடக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டென்பதை இவ்வியக்கம் வலியுறுத்துவதுடன், எல்லோராலும் ஒப்புக்கொள்ளத்தக்க ஓர் உண்மையைப் போன்று இதனையும் முன்பின் யோசிக்காது அனைவரும் பின்பற்றுமாறு, இவ்வியக்கம் தூண்டுகின்றது." என்று ராவ்பகதூர் எம். கே. ரெட்டியார் அவர்கள் கூறுவதில் ஒரு பெரும் அவசியமான விஷயம் வலியுறுத்தப் பெற்றுள்ளது. அதாவது, நம்பிக்கையே. பெரியார்கள், தங்கள் அறிவின் முதிர்ச்சியாலும், இடைவிடாச் சிந்தனையாலும், அநுபவத்தை யொட்டி, காலதேசவர்த்தமானத்தை யொட்டி, ஒரு உண்மையை வெளியிடுவார்கள். இவ்வுண்மையை பிறர் சோதிப்பதற்குரிமை பெற்றுள்ளார்களெனினும், பிறர்கட்கு அவகாசமின்மையாலும் ஆராயுந் திறமைக்குப் போதிய சாதனம் இன்மையாலும், பெரியார்களின் உண்மையில் நம்பிக்கை வைத்து அதனைப் பெருங்கோடாகப் பற்றி, அதற்கேற்ப ஒழுகுதல் உலக அநுபவம். இவ்வநுபவம் எக்காலத்திலும் பிறழ்ந்ததில்லை. ஆதலின் முதன்முதலில் நம்மவர்கள் அதுசரியா இது சரியா என்று நம்மியக்கத்தில் உள்ள உண்மைகளை ஆராய்ச்சி செய்து வீண் காலத்தைப் போக்காது உடனே அதன்படி நடப்பதே முறையென இதுசமயத்தில் எடுத்துக் காண்பித்துள்ளது மிகவும் அவசியமானதாகும். வைத்தியம் செய்வான் ஒருவன் நல்கிய ஔடதத்தை நாம் அதன் முறையென்னவென்று விசாரிப்பதில்லை. உடனே அதை உடகொள்கின்றோம். முறையைத் தெரிந்துகொள்ளுவது விதிற்பிசகில்லை யாயினும், நமக்கு அம்முறை அனுவசியமாகும். அதுபோலவே, நம் தலைவர்கள் முந்துறுத்தியுள்ள நம்மியக்கத்தில் உள்ள உண்மையை, நம்மவர் அனைவரும் அதையுள்ளவாறே அங்கீகரித்து ஏற்ப நடத்தல் முறையென்பது எளிதில் புலப்படுகின்றது. ஆதலால் நமது சக்திகளை வீணே செலவிடாமல் "நம்முடைய சக்திகளையெல்லாம் ஒழுங்கு திரட்டி ஒரே கட்டுப்பாடாக நின்று, சமூகக் கொடுமைகளைக் களைவதே நமது அடுத்த வேலை" யென்றும் "நம்மைப் பேய்போல் ஆட்டிவரும் மூடப் பழக்க வழக்கங்கள் அனைத்தையும் இனித் தலைகாட்டாது அறவே நாட்டைவிட்டுத் துறத்தவேண்டும். மூடக்கொள்கையென்னும் சனியன் எண்ணிறந்த தோற்றத்தினை உடையதாய் வெளிப்படுகின்றது. அவை யிருவகைத்து—வைதீக மூடக்கொள்கை; ஜாதிபேத மூடக்கொள்கையாகும்." என்றும் கூறுகின்றார். இதன் உண்மையை நம்மவரனைவரும் அறிவார்கள். வைதீகமூடக்கொள்கைக்காதாரமான புரோகிதர்கள், குருக்கர்கள், மோட்சலோகக் கர்த்தர்கள் முதலியவர்களின்போக்கிற்சென்றுமென்மேலும் அடிமைப்படுவது மதியீனமாகுமென்றும், இவர்கள் யுத்தகாலத்தில் ஒதுங்கி நின்று சமாதான காலத்தில் ராஜ்யங்களையே கவிழ்ப்பவர்கள் என்றும், இதற்கு உதாரணம் புராதன எகிப்தும், ரோமா புரியும் என்றும், இவர் தமது அரிய ஆராய்ச்சிக்கேற்பமொழிவதை நாம் ஆமோதிக்கின்றோம். அதாவது புராதன ரோமாபுரி அழிந்ததுபோல, எகிப்து அழிந்ததுபோல, புராதன பாபிலன் அழிந்ததுபோல, இடந்தெரியாமல் மண்ணோடு மண்ணாய் உயிரற்றுப், புகழற்று நிலை குலைந்து நிற்பதென்றால் இந்தியாவும் புரோகிதர்கள் ஆதிக்கத்திலும் குருக்கள்மார் ஆதிக்கத்திலும் நடைபெறுக; இல்லையேல், அமெரிக்கா, ஜர்மனி, பிரான்சு முதலிய முதற்றர நிலைமையைப் பெற்று என்ஞான்றும் இந்தியா சீரும் சிறப்புடன் நிலைபெற வேண்டுமானால், இத்தகைய தீயர்களின் வலையை அறுத்தொழிக என்கின்றார். ஆதலின், இக்கொடிய பழக்கவழக்கங்களைக் களைவதற்குப் பொதுஜனகட்குத் தக்க ஊக்கம் புகட்ட 'ஒரு லூதரோ, லெனினோ (ருஷியத் தலைவர்) முசோலினியோ கமால் பாக்ஷாவோ, அரசர் அமானுல்லாவோ அவசியம் நம் நாட்டில் பிறக்கவேண்டும்'' என்றும் கூறுகின்றார். நாமும் அநேக முறைகளில் இவ்வாறே கூறியிருக்கின்றோம். மயிலே, மயிலே, இறகு கொடு என்றால் ஒரு போதும் நமக்கு மயிற்றோகை கிடைக்காது. நயமாக, வஞ்சமாக, தாமதமாகச் செல்வதற்கு இது சமயமல்ல. வீரர்கள் போன்று சகல கட்டுப்பாடுகளையும் உதறி யெறிந்துவிட்டு, தீவிரதரப் பக்குவிகளாய் சமூக சீர்திருத்தங்களில் நாம் முன்பின் பாராது இறங்கவேண்டும். இதற்கு அரிய தியாகமும், வீரத்துவமும் அவசியம் வேண்டும். மிதவாதம் எல்லாம் நம் எதிரிகளுக்கு நாம் தானம் செய்து விடுவோம். இவ்வொரு விஷயத்தில் அமிதவாதிகளாய் நாம் திகழ்தல் அவசியத்திலுமவசியமே. ஆற்றுடன் போகும் நீந்தத் தெரியாதான் ஒருவன் பிணத்தையேனும தெப்பக்கட்டையாகக் கொண்டு கரையேறுவானாதலின், நமது சமூகத்திற்கு, நமதுநாட்டிற்கே உயிர்க்குலை வாய்ந்தபோது இனி பொறுமை பொறுக்க முடியாது. தீவிரதரமே வேண்டும், என்பதே இவர் கருத்தாகும். ஆதலின் சுயமரியாதை உண்மைக்கு மாறுபட்ட எவ்வித விஷயத்தையும் சற்றும் தயங்காது நிராகரிக்க வேண்டும். இதற்கு எத்தகைய தடை நேரினும் அதனை நாம் பொருட்படுத்தாது கடந்து வெற்றியடைவதே முறையாகும். "இந்நாட்டில் ஆழமாக வேரூன்றிக் கிடக்கும் மற்றொரு மூடக்கொள்கை, ஜாதி உயர்வு தாழ்வாகும். இது மதமென்னும் மூடக்கொள்கையுடன் சகோதரனாகப் பிறந்து பற்பல தோற்றங்களால் வெளியுலவுகின்றது......அரசியற் பார்ப்பான் பிரசங்க மேடைகளில் தனது அபிப்பிராயங்கள் எவ்வளவோ முன்னேற்றமடைந்துள்ளனவாகக் காண்பித்துக் கொண்ட போதிலும், பொதுவிடங்களிற் சாப்பிடும் போதும்கூட திரை மறைவில் சாப்பிடுகின்றான்......ஒரு பைத்தியம் பிடித்த நாய்க்கோ, குட்டரோகிக்கோ இருக்கும் உரிமை பொதுத் தெருவில் நடந்து போவதற்குக்கூட அவர்கட்கு (தீண்டப்படாதார் எனக் கூறப்படுபவர்கட்கு) யில்லை. ......பெண்கட்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதுகூட பாவமாயிருக்கின்றது. ஏனெனில் அவர்கட்கு எழுதப்படிக்கத் தெரிந்து விட்டால் காதற் கடிதம் எழுதுவார்களாம். பெண்கட்குச் சொத்துரிமையுமில்லை. தங்கள் வாழ்க்கையில் தக்க காலத்தில் தக்க புருடனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் இருக்கக்கூடாதாம். ஏனென்றால், வேதம் அப்படிக் கூறுகின்றதாம். இம்மாதிரி பல விஷயங்களைச் சொல்லத் தொடங்கினால் என் மனம் நோகின்றது" என்று நமது வரவேற்புக் கழகத் தலைவர் கவல்கின்றமைக்கு நம் நாட்டில் எவ்வளவோ ஆதாரங்கள் உள. தீண்டப்படாதார் எனப்படும் நம்மவர்களில் ஒரு பகுதியார் அடையும் இடைஞ்சல்களும், பெண்கள் படும் துயரங்களும் நம்மை உறுத்தாமலிருப்பதற்கில்லை. இவர்கள் சகித்துவரும் இடுக்கண்களைச் சிந்திக்கச் சிந்திக்கக் கல்லுங்கரையுமாதலால் நாம் கண்ணீர் சிந்துவது பெரிதன்றே. உண்மை வீரர்கள், உண்மைசுயமரியாதைத்தொண்டர்கள், உண்மை இந்தியர்கள் இப்பெரியார் கூறும் உண்மையை மதித்து இதற்கேற்றவாறு உழைக்க முன்வருவதே அவர்களின் கடமையாகும்.

நிற்க, நமது ரெட்டியாரவர்கள் மற்றுமொரு அரிய நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். "புத்தரை எடுத்துக் கொண்டால், வனாந்திரத்தில் உள்ள பகுத்தறிவற்ற மிருகங்கள் உள்பட உலகத்திலுள்ள எல்லாச் சீவராசிகட்கும் சமத்துவத்தையே நிலைநாட்டிய ஓர் பெரிய சீர் திருத்தக்காரர் என்றே அவரைச்சொல்ல வேண்டும்.........சுயநலமற்ற இக்கூட்டத்தார் செய்துள்ள அபாரமான வேலைகளெல்லாம் சுயநல மிக்காராயுள்ள சங்கராச்சாரியாராலும் அவர்புரோகிதக் கோஷ்டிகளாலும் பாழாய்ப்போய் விட்டன" என்று கூறும் இவ்வுண்மை நிகழ்ச்சியை நாம் நினைக்குந்தோறும் நெஞ்சம் பகீர் என்கின்றது. சிவகாருண்ய வள்ளல், சமூக சீர்திருத்தச் சுயம்பு, உலகம் போற்றும் ஒப்பற்ற அறிவாளி, அறிவையே மதமாகக் கொண்ட புத்தரின் சமரசக் கொள்கைகளை யெல்லாம் வஞ்சகமாக, நயமாக கள்ளத்தனமாக சுயநலத்தை உத்தேசித்து சங்கராச்சாரியும் அவர் கோஷ்டிக் குருக்கள்களும் புரட்டி விட்டதை யார்தாம் மறுப்பர்?

சமத்துவத்தைக் கொண்ட புத்தமதம் நம் நாட்டில் நிலைபெற்றிருப்பின், இப்பொழுது இந்தியா ஜப்பான், சீனம் முதலிய நாடுகளைப் போன்று ஒற்றுமையுடன் விளங்குமன்றோ! இந்தியாவில் உள்ள இத்தனை சாதிபேதங்களும், மூடக்கொள்கைகளும், அறிவென்னும் பௌத்தமதச் சூரியன் முற்பட்ட பனியென அழிந்து கெட்டிருக்குமன்றோ! பௌத்த சமயம் நம் நாட்டை விட்டகன்ற காலமுதல் நம் நாட்டைச் சனியன் பற்றிக் கொண்டது; நாடு, காடாயதென்றே சொல்ல வேண்டும். ஜாதிபேதத்தை நீக்கமுயன்ற நமது புத்தரின் நோக்கம் இந்நாட்டில் பார்ப்பனச்சூழ்ச்சியால் ஆழ்த்தப்பட்டதெனினும் அழிக்கப்படவில்லை; உண்மைக்கு ஒரு காலத்தும் அழிவு கிடையாதாதலின். இப்பொழுது நமக்குள் வளர்ந்தோங்கி வரும் சுயமரியாதை இயக்கம் எல்லாச் சமூக சீர்திருத்தக் காரர்களின் அபீஷ்டங்களையும் நிறைவேற்றும் என்பதற்கெட்டுணையும் சந்தேகமில்லை.

"சீர் திருத்த மென்று பேசுவதால் மட்டும் பரிசுத்த மடையாது. வெறுங் கூச்சலும் சோம்பேறிப் பேச்சும் தற்போது சகசமாகக் காணப்படுகின்றன.........பானகல் அரசர் லாலா லஜபதிராய் போன்ற தலைவர்களையும் எமன் கொண்டு போய் விடுகின்றனன்.......அதைக் கண்டு வருந்துவதிற் பயனில்லை. உங்கள் வேலைக்கான ஒரு தலைவரைத் தேர்ந்தெடுங்கள்' என்று நமது ரெட்டியார் அவர்கள் உரைப்பதை நாம் ஆழ்ந்து நோக்கினால், இப்பொழுது நமது நாட்டில், சமூகச்சீர்திருத்தத்தின் போரால், சுயநலத்தால் ஊளையிடுகின்ற பார்ப்பனர்கள் படுகுழியில் இனியேனும் வீழாமல், நமக்குள் நற்றலைவரைத் தேர்ந்து அவர் சென்ற வழியே பின்பற்றிப் போதல் அவசியமென ஏற்படுகின்றது. இதனை நாம் முற்றிலும் ஆதரிக்கின்றோம்.

மேலும், ராவ்பகதூர் ரெட்டியார் அவர்கள் தான் ஓர் நாஸ்திகன் அல்லவென்றும், ஆனால் தன்னை ஓர் விக்கிரக சம்ஹாரி யென்று கூறிக் கொள்வதைப் பெருமையாகப் பாவிக்கின்றாரென்றும், இப்பொழுது நமது இயக்கத்தைத் தூற்றிவரும் சிற்சில சுயநலக் குறும்பர்கட்கு மிடைமிடுப்பது போற்றுதற்குரியதாகும். சாமியென்றும் மூர்த்தியென்றும், தீர்த்தமென்றும் தலமென்றும், அறியாச் சனங்களை பொம்மைகளைக்கொண்டு அடிமைப்படுத்திவரும் கொடிய வழக்கத்தை இப்பெருமை மிக்கார் முழு மனதுடன் எதிர்ப்பது இவரதின் மேலான அறிவிற்கும் அரிய ஆராய்ச்சிக்கும், பயிற்சிக்கும் அத்தாக்ஷியாகவே துலங்குகின்றது. கடவுள் உண்டாவென்றும் இல்லையென்றும் மயிர் பிடித்துச் சண்டையிடுவதைப் பார்க்கிலும், நாம் கண்ணுறக்காணும் சமூகக் கொடுமைகளை யறவே அழிக்க நம்மவர்கள் முந்துவார்களென்றே நம்புகிறோம்.

கிணற்றில் விழுந்த பெண்
சேலத்தில் தற்செயலாக நேர்ந்த சம்பவம்

சேலம், பிப்ரவரி, 18

கிச்சுப்பாளையத்தில் சிதாயி என்ற 16 வயதுப் பெண்ணொருவளும் அவளின் சகோதரியும் ஒரு கிணற்றுக்குத் தண்ணீரெடுக்கச் சென்றனர். தண்ணீர் எடுக்க கிணற்றுநிலில் குனிந்த பொழுது சிதாயி கால்வழுக்கிக் கிணற்றில்வீழ்ந்துவிட்டாள் உடனே அவ்வூரிலுள்ளவர்கள் ஓடிவந்து அவளை எடுக்க முயன்றும், பிரயோசனமற்று விட்டது. அவளின் பிணம் நேற்று தான் காணப்பட்டது. போலீசார் அந்த விடத்திற்கு வந்து அது தற்செயலாக நேர்ந்த மரணம் என பதிந்து கொண்டனர்.

திரு. படேல் விருந்து
அரசப்பிரதிநிதி-காந்தி சந்திப்பு(?)

புதிய டெல்லி, பிப், 18

இந்தியச் சட்டசபைத் தலைவர் திரு. படேல் தான் தனது வீட்டில் நடத்தும் விருந்திற்கு அரசப் பிரதிநிதி, சேனாதிபதி, கனம் திரு. கிரரார், பண்டிட் மதன் மோகன் மாளவியா, திரு. எம். ஏ. ஜின்னா, சர். டார்சிவிண்டேசே, சர். அப்துல் குயாம், டாக்டர். எம். ஏ. அன்சாரி முதலியோரை அழைத்துள்ளதாய் தெரிகின்றது. திரு. படேலின் வீட்டில் தங்கியிருக்கும் திரு. காந்தியும் அவ்விருந்தில் கலந்து கொள்வாரென்றும், அப்பொழுது பொதுவாக சம்பாஷணைகள் நடைபெறலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

அரசாங்க சபை.

இந்திய ஆயுதச் சட்டரத்து.

போக வர டிக்கட்கள்.

புதிய டெல்லி, பிப் 1[illegible]

இன்று காலை அரசாங்கசபை [illegible]டியபோது முன்னை விட அதிகமான [illegible]ங்கத்தினர்கள் வந்திருந்தனர். அரசிய[illegible] காரியதரிசி திரு: வாட்சன் சுதேசம[illegible]னர்கள் சபைக்கூட்டத்தினால் அதி[illegible] வேலையில் ஈடுபட்டிருந்தமையா[illegible] இன்று அவர் காலம் கடந்து வந்தா[illegible] எனவே அவர் மாலையில் ராஜவிசுவாச பிரதிக்ஞை செய்தார்.

முதலில் குமார்சங்கர ராய்சௌத்தி[illegible] இந்திய ஆயுதச்சட்டத்தை ரத்து செய்[illegible] வேண்டும்அல்லது இங்கிலாந்திலிருப்ப[illegible]தற்கு ஒப்பத்தம் மாற்றவேண்டுமென ஒ[illegible] தீர்மானம் கொண்டுவந்தார். இதைப்ப[illegible]றி பலமானவாதம் நடந்தபின் பிளவில்லாது தோற்றது.

சேத் கோவிந்தாஸ் விரைவி[illegible] எல்லா அரசாங்க ரயில்வேக்களிலும் மூன்றும் வகுப்புப் பிரயாணிகட்கு போய்வரசாதாரணமாய் டிக்கட் கொடுக்கும் முறையையும்எட்டுமாதங்கட்குஒருமுறை சீசன் டிக்கட்கொடுக்கும் முறையும் குறைந்த கட்டணத்தில் ஏற்படுத்தவேண்டுமென பிரேரேபித்தார். சர். ஜியார்ஜ் பிரிகார்பெட் அரசாங்கம் இவ்வாண்டில் கட்டணத்தை குறைத்துள்ளமையால் இத்தீர்மானத்தைஎதிர்ப்பதாய்கூறினார். தீர்மானம் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டது.

டாக்டர் யு, ராமாராவ் இந்திய அரசாங்கம் நேராக ஆதிக்கம் செலுத்தும் இடங்களில் குதிரை பந்தய ஆட்டங்களை நிறுத்தவேண்டுமென்று பிரேரேபித்தார். இத்தீர்மானமும் தோற்றது. சர். முகமத் ஹபிபுல்லா 22ந்தேதி சபை ரயில்வே வரவு செலவு கணக்கைப்பற்றி பொதுவாக வாதிக்குமென தெரிவித்தார்.

பர்மா சட்ட சபை

பிரிவினையைப் பற்றிய விவாதம்

ரங்கூன், பிப், 18

ஜனக்கக்ஷித் தலைவர் ஊ. பா. பே. இன்று பர்மாப் பிரிவினையைப்பற்றிப் பேசவேண்டுமென சட்டசபையில் வாதித்தார். சைமன் கமிசன் முன் இதைப் பற்றி எடுத்துரைத்திருக்கும்போது, இப்பொழுது அதைப்பற்றிப் பேசஅவசியம் நேரவில்லை யென்று பொருளாதார அமைச்சர் இதனை எதிர்த்தார். மேலும் அங்கத்தினர்கள் இதைப் பற்றி அவசியம் விவாதிக்க வேண்டியதென்று கருதுவார்களாயின் அரசாங்க அங்கத்தினர்கள் இவ்விவாதத்தில்கலந்து கொள்ளத்தயாராயில்லை யென்றும் இப்பொழுது பிரிவினையைப்பற்றிப் பேச ஆதாரங்கள் சித்தமாயில்லை யென்றும் கூறினார்.

தாராவடி ஊபே நெல் வியாபார நிலைமையைப் பற்றி விசாரிக்க ஓர் கமிட்டி அமைக்க வேண்டுமென்று பிரேரேபித்தார். பிரேரேபணை ஆதரிக்கப்பட்டது. ரங்கூன் சங்கவருல் கமிஷனர்கள் சட்டசபை ஆதிக்கத்தில் இருக்க வேண்டுமென்று கூறிய தீர்மானம் கைவிடப்பெற்றது. பிரேரேபித்தவர் ஓட்டுவிட்டபொழுது வரவில்லையாம்.

தீ மிதிக்கும் விழாவில் விபத்து

ஒரு பெண்ணுக்குப் பலத்த காயம்

கும்பகோணம் பிப்ர 18

காவரா வைசூரி அம்மன்களின் சாந்[illegible]த்திற்காக செய்யப்படும் தீமிதிக்கும் உத்சவம் இவ்வாண்டு சீர்காழியில் சிலதினங்களுக்கு முன்னர் நடைபெறுகையில் நெருப்பில் 10 வயதுப் பெண்ணொருவள் தற்செயலாக விழுந்து பலத்த எரிகாயமடைந்து விட்டாள். உடனே அவளை ஆஸ்பத்திரிக்கும் தூக்கிக் கொண்டு போகப்பட்டு அங்கே ஆபத்தான நிலையிலுள்ளாள்.

கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா

கவர்னரின் பிரசங்கம்

கல்கத்தா, பிப், 1[illegible]

மேன்மை தங்கிய கவர்னர் தன் பி[illegible] சங்கத்தில் கல்விபயின்ற பெண்கள் [illegible]கள் பாலர்கள் கல்வியடையும் வ[illegible]ணம் ஈடுபட்டிருப்பது கவனிக்கத் தக்[illegible]தென்றும், பெண்கல்வியானது பர[illegible] வருவது சமூக முன்னேற்றத்திற்கு உதவியானதென்றும், படித்தப் பெண்க[illegible] பெண் கல்வியைப்பரப்ப முன்வர[illegible] வேண்டுமென்றும் இது போது சர்[illegible] கலாசாலைப் பட்டங்கள் ஏற்ற பெண்க[illegible] பல துறைகளிலும் இறங்கி பெண்களுக்[illegible] வழிகாட்டியாகவிருக்க வேண்டுமென்றும் கூறினர்.

தன்மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலை தூக்குவார்கள்

(கைவல்ய சாமியார் எழுதுவது)

நமது செங்கல்பட்டில் ஒன்றுசேர்ந்து கூடின கூட்டமும், ஆடின ஆட்டமும், பாடின பாட்டுக்குப் பக்கத்து மேளமும் "மசான வைராக்கியம் வீடுபோனவுடன் விட்டுப் போகுமாம்" என்பது போல அவரவர்கள் ஊர் போய்ச் சேர்ந்ததும் மகாநாட்டுத் தீர்மானங்களை விட்டுவிட்டார்களா? விடவில்லையா? என்பதை அவர்கள் வாழ்க்கையின் பின் சரித்திரத்திலிருந்து அறியவேண்டும்.

தன்மதிப்பு உங்களிடமிருக்குமானல் உங்கள் சமயத்தில் நீங்கள் சூத்திரர்களாக இருப்பதற்குக் காரணமென்ன? சூத்திரன் என்பவன் சமயத்தில் தன் மதிப்போடு எப்படி இருக்க முடியும்? சூத்திரன் என்ருல் சிகண்டில் கிலேச முடையவன். அதாவது எப்போதும் துக்கத்தோடிருப்பவன் என்றும், தரும சாஸ்திரமென்னும் ஸ்மிருதியில் அடிமை, தாசிமகன், ஏவல்பணி செய்வோன் என்றும், இதிகாசங்களில் ஆச்சாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதைப் புசிப்போன் என்றும், (பன்றிதான் கண்டதைப் புசிக்கும்) அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரத்தைக்கொண்டே மதசம்பந்தமான ஏற்பாடுகள் இன்று வரையிலும் நடந்து வருகின்றன. கிராமங்களி[illegible]ருக்கும் ஒரு கூட்டத்து ஆதிதிராவி[illegible]ளை நீ யார்? நீ யார் என்று கேட்டால் கிறிஸ்தவனுன ஆதிதிராவிடன், "நான் ஞான ஸ்னானம் பெற்றவன். இவர்கள் அஞ்ஞானிகள்" என்கிருன். மற்றவர்களைக் கேட்டால் "நாங்கள் அஞ்ஞானிகள், அவர்கள் கிறிஸ்தவர்கள்" என்கிருர்கள். இவர்களுக்கு அஞ்ஞானிகள் என்பதன் அர்த்தம் தெரிந்தால் தங்களை அஞ்ஞானிகள் என்று சொல்லிக் கொள்ளமாட்டார்கள். இவர்கள் தங்களை ஆதிதிராவிட கிறிஸ்தவர்கள் என்றும் சொல்லுவதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதுபோல சூத்திரன் என்பதின் அர்த்தம் தெரிந்திருந்தால் நம்மவர்கள் சூத்திரர் என்று தங்களைச் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். பாப்பானும் அவன் புஸ்தகமும் சொல்லுவதையும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

ஆதிதிராவிடர்களுக்குத் தங்களையோ இந்து சமூகத்தைப் பற்றியோ அதன் கடவுளைப் பற்றியோ தங்களைக் காலில் போட்டு மிதித்துக் கடைசியில் தள்ளிவிட்ட கதைகளைப் பற்றியோ தங்களுக்குக் கல்வியைச் சொன்னல் நரகம் வருமென்று சொல்லும் சாஸ்திர ஏற்பாட்டைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. இவர்களுக்குக் கல்வியறிவோ சமய ஒழுங்கோ சமூகச் சேர்க்கையோ வாராமலிருப்பதற்கு அநேக நாட்களுக்கு முன்னரே யே எல்லா வழியையும் அடைத்தாய் விட்டது. அதுபோல பிரம ஞானமும் விரிந்த வாழ்வும் சூத்திரனுக்குக் கிடையாதென்று முன்பே பிராமணன் விதி போட்டு தனது ஸ்தானத்தை முன்ஜாக்கிரதையாலே கெட்டிப்படுத்திக் கொள்வதற்கு ஜனங்களின் அறிவை ஒடுக்கி விட்டான். அறிவின் வேர்களை இவர்களிடமிருந்து பறிப்பதற்காக பலவிதமான நூல்கள் செய்து கடவுளால் கொடுக்கப்பட்டவை யென்று பயப்படுத்தியும் வைத்தான். அதனல் சூத்திரனுடைய [illegible]

கள் சொல்லும் தமிழ் வேதத் தேவாரம் நம்முடைய சிவபெருமான் கோவில்களில் பூசைக்குப் பின்னும் படிக்கப்படாது பிரசாதம் கொடுப்பதற்கு முன்னும் படிக்கப்படாது வீட்டிற்குப் போகையில்தான் படிக்கவேண்டுமென்று கோவில்களில் நடந்துவரும்ஏற்பாடும் அதற்குச் சிறிது முரண்பட்டால்உங்களையும் நம்முடைய தேவாரத்தையும் ஓட்டிவிடுவதும் நீங்கள் பார்த்ததில்லையா? கேட்டதில்லையா? சிறிது நாளைக்குமுன் ஒரு கோவிலில் தேவாரம் படிப்பதைத் தடுத்துவிட்டதாக பத்திரிகையில் நீங்கள்படித்திருக்கலாம். நீங்கள் சூத்திரனென்பதும் தேவாரம் சூத்திர பாஷை என்பதும் தவிர இதற்குவேறு காரணமேதாவதிருந்தால் சைவப் பண்டிதர்களே சொல்லுங்கள். இதைக்கேட்க வருகிறவர்களை நாஸ்திகர்களென்று சில பண்டிதர்கள் சொல்லுவதும் உங்களில் சிலர் தலையசைப்பதுந்தானு தன் மதிப்பைக் காப்பாற்றுவது? ஜஸ்டிஸ் கட்சியில் யார் இருந்தால் என்ன? யார்போனுல் என்ன? அந்த கட்சியால் நன்மையடைந்தவன் அதற்கு உதவி செய்யாமல் அவன் நாசமாகப் போனுலென்ன? தரும சாஸ்திரம் சொல்லுவதுபோல நீங்கள் தாசிமக்களான அடிமைகளா இதிகாசம் சொல்லுவதுபோல் ஆசாரமில்லாமல் ஒழுக்கம் கெட்ட கண்டதைப் புசிப்பவர்களா? என்பதே இங்கு விவகாரம்.

சூத்திரன் என்னும் இழிவுப் பேரைக் கற்பித்தும் நீங்கள் பிறந்த அரைவீட்டிலிருந்து வளர்ந்து பள்ளிக்குப்போய் படித்து பத்தினியையடைந்து பாடை ஏறி பரலோகத்திற்குப் போய் பாப்பானுக்குக் கொடுக்கும் தான தருமத்தால் அங்கிருந்து சந்திர மண்டலத்தின் வழியாக சூரிய மண்டலத்தைத்தாண்டி அங்கிருந்து பார்ப்பானின்தயவில் உங்கள் மகன் பாப்பானுக்குப்படைக்கும் பதார்த்தத்தால் பிரம்மலோகம் போய்ச்சேர்ந்து பார்ப்பான் எழுதின எட்டைப் பார்ப்பானிடமே கேட்டுத் தெரியாமல் தானகவே படித்த குற்றத்தால் பிரம்மலோகத்தின் தூதர்கள் நாக்கையறுத்து அடித்துத் துரத்தி அங்கிருந்து பூலோகத்தில் நீங்கள் வந்து பிராமணனுக்கும் வைசியப் பெண்ணுக்கும் பிறக்கிறவரையிலும் சூத்திரனுக்கும் பிராமணனுக்கும் அதாவது தமிழனுக்கும் பாப்பானுக்கும் சமய விதிகளும் கர்ம ஞாயங்களும் வெவ்வேருகவேவேதத்தில் விதிக்கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணமென்ன? கடவுள்சொன்ன வேதத்திலும் அவரால் அனுப்பப்பட்ட பெரியவர்களிடத்திலும் இந்த வித்தியாசம் எப்படி வந்தது? இந்த வித்தியாசமுடைய கடவுளும் கடவுளா? இப்படி வித்தியாசம் கற்பித்தவர்களும் பெரியவர்களா? என்று நாங்கள் கேட்டால் நாஸ்திகர்களா? பெரியவர்களைத் தூஷிக்கிறவர்களா? நல்ல அம்சங்கள் எத்தனையோ அதிலில்லையா? குற்றத்தை நீக்கிக் குணத்தையல்லவோ கைக்கொள்ள வேண்டுமென்று சமாதானமும் சொல்லுகிறீர்கள். எல்லாவித லக்ஷணமும் நல்ல குணமுமுடைய பெண்ணிற்கு பெண்குறி இல்லாவிட்டால் குடும்ப விர்த்திக்கு பெண்ணின் மற்ற விசேடங்களால் என்ன பிரயோஜனம்? அழகும் படிப்பும் பணமுமுடைய வாலிபனுக்கு ஆண்மையில்லாத அமைப்பிருந்தால் அவனை விவாகம் செய்யும் பெண்ணின் வாழ்க்கைக்கு அவனிடமிருக்கும் நல்ல குணத்தால் வரும் நன்மை எதற்கு? காதலன் காதலி இவர்களின் வாயினின்று வந்த வாச [illegible]

லத்தாலே தன் மதிப்படையலாம். எல்லா தேசங்களிலும் சிலர் தமது சமூகத்தின் இயற்கைப் பிரதிநிதிகளாகப் பிறந்து சமூகங்களின் கஷ்டங்களைத் தாம் பொறுக்கிருர்கள். எதிர்ப்பையெல்லாம் வெட்டிப்பாதை போட்டு, மற்றவர்கள், பின் வருவதை எளிதாக்குகிருர்கள். உண்மையென்று கண்ட சத்தியத்தினிடையே கண்விழித்து உதயம் வருமென்று காத்திருக்கிருர்கள்.

இங்கிலீஷ் படித்து கலாசாலை முத்திரை வாங்கின கனவான்களே! நாங்கள் சொல்லும் நியாயம் உங்கள் படிப்பிற்கு சிறிதேபானுலும் உங்கள் புத்திக்கு உண்மையல்லவா? ஐரோப்பாவிலும் முன்னொரு காலத்தில் எல்லா விவகாரங்களிலும் பாதிரிகளுடைய அதிகாரம் மூர்த்தண்யமாக நடந்தது. எங்கும் வீசியிருந்த பாதிரி வலையை அறுத்த பிறகு தான் ஐரோப்பிய ஜனங்கள் ஸ்வராஜ்யப் பாதையிலே கால் வைக்க இடமுண்டாயிற்று என்று நீங்கள் படித்ததை எந்தச் சட்டைப் பையில் போட்டிருக்கிறீர்கள். ஸ்பெயின் தேசம் இங்கிலாந்தின் மீது சண்டை தொடுத்த காலத்தில் ஸ்பெயின் தேசத்து கப்பற்படை கோவில் விவகாரங்களுக்குக்கட்டுப்பட்டு ஜாதி மரபுப்படி அதிகாரம்வகித்து அசையாத மாமூலின் இரும்புப் பிடியினின்று விவகாரத்தினுல் தோற்றுப்போனதென்று நீங்கள் கேட்டதில்லையா? ஐரோப்பாவில்கோவில்கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தலையை வெட்டி தன் மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலை தூக்குவது இயல்பாயிற்று என்பதின் சரித்திரங்கள் நீங்கள் படித்ததுதானே. நாங்கள் சமயத்தைக் குற்றம் சொல்லுகிறோம் என்று நீங்கள் கூடவா நினைக்க வேண்டும்? சமயம் வேறு, குருக்கள் கட்டுப்பாடு வேறு என்பதை நீங்கள் இனியுமா தெரியவில்லை? மதாச்சாரிகள், வீரர்கள் [illegible]

கொழுத்திருக்கும் சோம்பேறிகளுக்கும் கடவுளின் அன்னசாலையிலே வசிப்பவருக்கும் தானதருமங்கள் கொடுப்பதினுல் தானு உங்கள் கடவுளை நீங்கள் பார்க்க வேண்டும். உங்கள் கடவுளை சுவார்த்த புத்தியால் தலைகீழாக்கப்பட்டிருக்கிறது. சமயக்கொள்கைகளும் நெறிகளும் வீணுக்கப்பட்டு அதன் பலன்கள் பாழாக்கப்பட்டுமேல் பூச்சுகளுடன் கல்லாக்கப்பட்டுவிட்டது. கடவுள் பெயரைச்சொல்லி ஏமாற்றும் ஆஸ்திகர்களைப்போல தொலை தூரத்தில் கடவுளைக்காணுமல் பிரகிருதியில் கடவுளைக் காணுங்கள். பிரகிருதியே கடவுள் மயமென்று நோக்குங்கள். பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிச் சாலையிலும் அந்தக் கலைஞர்களது அறைகளிலும் கடவுளைத் தரிசனம் செய்யுங்கள். தெய்வத்தன்மை பொருந்தியதாக ரசாயன மேடை கருதப்படட்டும். பிரகிருதியைப்பற்றிப் படிப்பது கடவுளது எண்ணங்களையே மறுபடி எண்ணுவதற்குச் சமமல்லவா என்று அகாஸிஸ் என்னும் தத்துவ சாஸ்திரி கேட்டதை நீங்கள் படித்திருப்பீர்களே.

அருமைத் தோழர்களே! இங்கே சற்று கவனியுங்கள். இமயகிரியில் செழித்தோங்கி வளருகின்ற மரங்களுக்கு எனதுஉஷ்ணத்தையும் ஒளியையும் கொடுத்துவிட்டேன். அதைக்கொண்டே நீங்களும் திருப்தியடைந்து வளரவேண்டும். உங்களுக்கு மறுபடியும் இவ்விதம் மேன்மையையும் சக்தியையும் கொடுக்க மாட்டேன். என் முதற்பிள்ளைகளுக்கே எல்லாம் கொடுத்துவிட்டேன். அதனிடமே நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் இல்லையேல் அழுகிப் போவீர்கள் என்று செங்கல்பட்டிலிருக்கும் தென்ன மரங்களிடம் சூரிய பகவான் கூறினுல் இந்த தென்னமரங்கள் செழித்தோங்கி விர்த்தியாகுமா? தோட்டத்திலுள்ள ஆரஞ்சி, ஆப்பிள் பழங்களின்மேல் வீசும் சூரிய உஷ்ணத்தைக்கொண்டு தடாகத்திலிருக்கும் அல்லி தாமரைமலர்கள் புஷ்பித்து விடுமா? உங்களுடைய ரிஷிகள், புத்த பகவான், ஏசு கிறிஸ்து, நபி நாயகம் முதலியவர்களிடம் தோன்றிய ஞானத்தைக் கொண்டு ஷேக்ஸ்பியர் நி

யூடன், ஸ்பென்ஸர், அடிசன் முதலியவர்கள் வசிக்க முடியுமா? என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

மனு வசித்த காலம் எப்போதோ போய் விட்டது. பூமியானது பலவிதமாறுதல்களையடைந்து விட்டது. நதிகள் தம் சொந்த மார்க்கங்களை நீத்தன. சிங்கம் புலி கரடி என்ற கொடிய மிருகங்கள் வாழும் மலைகளெல்லாம் நாகரீகமிகுந்த ஆணும் பெண்ணும் ஆடிப்பாடும் அரண்மனைகளாய் விட்டன. அடர்ந்த காடுகள் வெட்டிக் கொளுத்தப்பட்டுப் போயின. புஷ்ப ஜாதிகளும் மிருக ஜாதிகளுமே மாறி விட்டன. தேசமழையும்தேசத்தை விட்டோடி விட்டது. இந்துக்களின் வழக்க பழக்கங்கள் எல்லாம் பழையமாதிரியுமில்லை பன்றிக் கறியைத் தின்னவே பாப்பான் படிக்கும் படிப்பெல்லாம் பாடுபடுகிறது. இப்படி இருந்தும் ஆத்ம வழியென்பதே அறியாதவர்கள் பிராமணர்களென்று சொல்லிக் கொண்டு நம் நாட்டில் இன்னம் அப்படியே மனுவால் அவர் காலத்தவருக்குஎழுதப்பட்ட விஷயங்களுக்கும் கருமங்களுக்கும் ஜாதியின் ஒழுங்கிற்கு தாராளமாக அடிமைத்தனம் வேண்டுமாம். வழக்கத்திலில்லாத பாஷையின் மூலமாகக்கிடைப்பதெல்லாம் தெய்வீகமானதாம். உங்களை அடிமை கொள்ளவும் தாசிமக்களாக்கவுமான சூத்திர கர்மங்களுக்குத்தான் அதன் தெய்வீகம் பலிக்குமாம். பார்ப்பானின் கர்மங்களையெல்லாம் விட்டு பலகர்மங்கள் செய்தாலும் அந்த தெய்வத்தன்மை அவர்களை விட்டுப்போகாதாம். இதுவென்ன ஞாயம்? என்ன தேவாம்சம்!

மதுரை முனிசிபாலிட்டி

டெண்டர்நோட்டீஸ்

1929-30-ம் வருஷத்துக்கு ஷை முனிசிபாலிட்டியின் உபயோகத்துக்காக நிலக்கரி சப்ளை செய்ய சீல் வைத்த டெண்டர்கள் தேவை. நிலக்கரி உயர்ந்த குணமுள்ளதாக இருப்பதுடனும், டெண்டர்களுடன் அலிபூரிலுள்ள கவர்ன்மெண்ட் டெஸ்ட் ஹவுஸிலிருந்து சமீபத்தில் கொடுக்கப்பட்ட (Analytical) சர்ட்டிபிகேட்டை அனுப்பவேண்டும். மேலும் சப்ளை செய்யப்படும் நிலக்கரியானது தூசியில்லாமலும், நன்கு சலிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். நிலக்கரியை மதுரை ரயில்வே ஸ்டேஷனுக்கு சுமார் 3 மைல் தூரத்திலிருக்கும் கோச்சடையிலும், சுமார் 1 மைல் தூரத்திலிருக்கும் ஆரப்பாளையத்திலும் உள்ள வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன்களிலேயே சப்ளை செய்யவேண்டும்.

2. ஷை 1929-30-ஞு முழுதும் கோச்சடை பம்பிங் ஸ்டேஷனுக்கு சுமார் 700 டன்கள் நிலக்கரியும் ஆரப்பாளையம் பம்பிங் ஸ்டேஷனுக்கு சுமார் 400 டன்களும் தேவையாயிருக்கும்.

3. டெண்டர்கள் நாளது1929-ம் வருஷம் மார்ச்சு மாதம் 1-ந் தேதியிலாவது அதற்குள்ளாகவாவது, ரூ. 100 டிபாசிட் தொகையுடன் அடியிற் கையொப்பமிட்டிருப்பவரிடம் கிடைக்கவேண்டும். டெண்டர் அனுப்புவோர், எக்காரணத்தை முன்னிட்டும், இந்த முனிசிபாலிட்டியில் அவர்களுக்குக் கொடுபடவேண்டிய தொகைகள் ஏதாவதிருந்தால் அத்தொகைகளை டிபாசிட்டாக எடுகாட்ட அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் டெண்டர்கள் பைசல் செய்யப்பட்ட 15 தினத்திற்குள் மேல்கொண்டு ரூ. 300 டிபாசிட்டும், இந்த ஆபீசிலிருந்து கொடுக்கப்படும் நகலின்படி ஓர் கண்ட்ராக்டு அக்ரிமெண்டும் முடித்துக்கொடுக்கவேண்டும்; தவறினுல் அவர் டிபாசிட் தொகையை இழப்பதுமன்னியில் கண்ட்ராக்டும் ரத்து செய்யப்படும்.

4. எல்லா டெண்டர்களையுமாவது அல்லது எந்த டெண்டரையாவது யாதொரு காரணமுமன்னியில் தள்ளுபடி செய்ய கௌன்சிலுக்கு உரிமையுண்டு. டிபாசிட் தொகைகள் சப்ளை செய்யப்பட்டதின் நிமித்தம் தொகை செல்லான வவுச்சர்கள் ஆடிட் முடிந்தபிறகுதான் திரும்பக் கொடுக்கப்படும்.

(Sd) P. M. Shanmugam Chettiar,
Vice-Chairman incharge.

முனிசிபல் ஆபீஸ்,
மதுரை.
14—2—29. (405)

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

கௌஹர்ஜான் காதல்

இரண்டாம் பாகம் வெளியாய்விட்டது!!!

இந்நாவலின் முதற்பாகத்தைப் படித்தவர்களுக்கு இதன் மேன்மையைக் கூறவேண்டியதில்லை. இந்நாவல் நாவலுலகிலேயே தலைசிறந்ததாகும். பல கலர் ஹாப்டோன் படங்களடங்கியது.

360 பக்கங் கொண்ட முதற் பாகம் விலை ரூ. 1—8—0 | வி. பி.
380 பக்கங்கொண்ட இரண்டாம் பாகம் ,, ரூ. 1—8—0 | வேறு.

தாருல் இஸ்லாம் புத்தகசாலை,
241. எ. நெ. 73, தம்புசெட்டித்தெரு, தபாற்பெட்டி 15, சென்னை.



"குறிந்த நவணயில் கிடைக்க வேண்டுமானுல்" கீழே குறிப்பிட்ட விலாசத்துக்கு போங்கள். மூக்கு திருகு முதற்கொண்டு எவ்வளவு விலை உயர்ந்த நகை வேண்டுமானுலும், அசல் சவரப் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கை இருப்பில் அநேக நகைகள் இருக்கிறது.

உம்முடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பெனி,
நகை தொழிலாளர்கள், 25, சைனுபஜார் ரோட், மதராஸ்.
தந்தி:—"உம்மிடியார்" டெலிபோன் 2802.
(118 பி)

இனி நரையே இல்லை!

மாஜிக் கூந்தல் தைலம்

நரையைத் தடுக்கும் மருந்து

மயிரின் நிறமே வயதுக்கு அறிகுறி. இப்போதே மயிருக்கு இயற்கை நிறம் ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அங்குமிங்கும் நரைக்கும்வரை காலதாமதம் செய்யாதீர்கள். நம்மிந்தியாவில் இதுதான் முதல்தடவையாய் தயார் செய்யப்பட்டுள்ளது.

மாஜிக் கூந்தல் வளர் தைலம் சாஸ்திர ரீதியாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இது சாயமல்ல. இதில் வருணப்பொருள் எதுவுமில்லை. கை, தலை, துணி முதலியனவற்றில் இதனல் கறை ஏற்படாது.

மாஜிக் கூந்தல் தைலம் மயிர் விழுவதை தடுக்கும். பாட்டை, நரை, பிசுபிசுப்பு, இரட்டை மயிர் விழுதல், இளநரை முதலிய மயிர் ரோகங்களை தீர்க்கும். பேன், ஈர் ஆகிய தலை கிருமிகளை போக்கும்.

மாஜிக் தைலம் எல்லாவித மயிர் ரோகங்களையும் போக்கடிக்கும். ஒரு புட்டி தைலம் ரூ. 2. உடனே வாங்கி உபயோகியுங்கள். மாஜிக்போலவே இது ஆச்சரியகரமான குணம் கொடுக்கிறது. எங்கும் கிடைக்கும். தபால்கூலி வேறு. சென்னை மாகாணத்துக்கு சோல் ஏஜெண்டுகள்:—

ராஜாராம் அண்ட் கோ.,
(350) 27, சின்னதம்பி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

கிருஷ்ண விலாஸ் சீவல் மெஷின்

கொட்டைப்பாக்கு சீவல்

எங்களிடத்தில் கொட்டைப்பாக்கில் தயாரிக்கப்பட்ட கைசீவல், நைஸ்சீவல், சுருள் சீவல், வாசனை சீவல், ஜலத்தால் ஊறவைக்காத மெஷின் சீவல், கொப்பரை சீவல், இன்னும் பலவிதமான சீவல் ரகங்களும், கொட்டைப்பாக்கு, வாசனைப்பாக்கு, பட்டணம் பாக்கு, வெள்ளரி விதை முதலியன விலை நயமாக கிடைக்கும். 1 நெ. கை சீவல் வீசை 1-க்கு ரூ. 1-4-0. 2 நெ. கை சீவல் வீசை ரூ. 1-0-0. நைஸ் சீவல் வீசை ரூ. 3-12-0. சுருள் சீவல் வீசை ரூ. 5-0-0. வாசனை சீவல் வீசை ரூ. 5-0-0. மற்றவை காலக்கிரயம் வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும். விபரத்திற்கெழுதவும்.

போ. அப்பசாமி செட்டியார்,
நெ. 69, பெரியகடைத் தெரு, கும்பகோணம்.

(404)

சுக்ல வருஷத்திய
நேத்திர ஜீவ நக்ஷத்திராதி
சாந்திர சௌரமான சர்வமுகூர்த்த

ஆனந்தபோதினி பஞ்சாங்கம்.

விலை 1-க்கு அணா 2.
6-க்கு அ. 8.
12-க்கு அ. 14

எல்லா ஊர் புஸ்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

இதனோடு நமது புஸ்தகங்களும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், மதராஸ்.

(115 பி)

ஒரே நிமிஷத்தில் பலன் ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை

ஒரே நிமிஷத்தில் தாதுவைக்கட்டி இல்லற வாழ்க்கையில் அபரிமிதமான பிரியத்தைத் தரக்கூடிய சக்தி இந்தக் குளிகைக்குத் தான் வாய்ந்திருக்கிறது. இந்தக் குளிகையில் ஒன்றை மாலை 6 மணிக்குச் சாப்பிட்டு பால், வெற்றிலை யருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் கைமேல் பயக்கும். பத்துமாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூ. 2—0—0.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
808.எ. தபால்பெட்டி நெ. 119, மதராஸ்.

"முன்னேற்றம்"

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆதாரமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம் புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:-வே. சி. நாராயணசாமி
வெளியிடுபவர்:-ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0
அல்லது டாலர் 2-21.

விலாசம்:-மானேஜர், "முன்னேற்றம்",
152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

(378)

பிரயாணமா ?

கவலை வேண்டாம். வீட்டிற் போலவே பிரயாணத்திலும் நல்ல ருசியான சமையல் செய்துகொள்ளலாம்.

ருக்மணிகுக்கர்

அடுக்கு இந்தியாவிற் பெயர் பெற்றது. 5 அளவுகள் ரூ. 13, 18, 22, 27, 33. ரயிற்கூலி வேறு. விபர புத்தகம் இனாம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், (15)
சென்னைப்பட்டினம்.

(134 யி)

ஞான திருஷ்டி

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதை கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப் பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட்,
(119) சௌகார்பேட்டை, மதராஸ்.

சிடி சினிமா கம்பெனி, லிமிடெட்.,

பாலெஸ் ஆப் வெரைட்டீஸ், தெற்கு மாசி வீதி, மதுரை.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் 3 ஆட்டம். மாலை 3, 6-30, இரவு 9-30-மணி.
மற்ற தினங்களில் 2 ஆட்டம். மாலை 6-30, இரவு 9-30-மணி.

16-2-29-ல் சனிக்கிழமை முதல் ஒரு வாரம் மட்டும்.

உலகத்திற்கே பெரிய காக்ஷியானதும், கோரமான கடல் சண்டைகளும், 1,50,000 யுத்த வீரர்களின் திறமைகளும், சிறந்த குதிரைகளால் இழுக்கப்படும் ரதங்களின் ஓட்டமும், பயங்கரமான சர்க்கஸ் நிகழ்ச்சிகளும் நிறைந்துள்ளதுமான ரோமன் நோவாரோ, பெட்டி பிரான்ஸ், பிரான்சிஸ் புஷ்மேன் முதலியோர் நடித்த,

" பேன்—ஹர் "
" பேன்—ஹர் "
" பேன்—ஹர் "

என்னும் 12 பெரிய பாகங்களடங்கிய காக்ஷி நடைபெறும்.

3 வருஷ காலமாய் 5 மில்லியன் டாலர்கள் செலவு செய்தும், 40 காமராக்களை உபயோகித்தும், இடிந்திருந்த ரோம—ஜெருஜலம் நகரங்களைச் சீர்திருத்தம் பண்ணியும், வெகு பிரயாசையுடன் தயாரித்துள்ள உன்னதக் காக்ஷியை மறுமுறையும் காண்பதரிது !

23-2-29 சனிக்கிழமை முதல் ஒரு வாரம் மட்டும்.

காமிக் அரசன் கண்ணாடிக்காரன், ஹாரோல்டு லாயிட் ஆக்ட் செய்த

"ஹெவன்ஸ் ஸேக்"

என்னும் அரிய காக்ஷி நடைபெறும்.

ஜெ. ஸி. இராஜகோபாலய்யா,
(401) மானேஜிங் டைரெக்டர்.

நூதன வைரம்

சீமை கமலம் போல் கண்டு பிடித்தது, கட்டிடத்தில் உறுதியாகவும் பூரிப்பும் பிரகாசமும் உடையது. கமலம் காரட் ரூ. 5 முதல், ரூ. 10 வரை.

ஆர்டிபிஷல்நியோ டைமண்ட் கோ,
425, சௌகார்பேட்டை, மதராஸ்.
339 (Post Box 33

மூலம் பவுத்திரம்

எவ்வளவு நாள்பட்டதானாலும் குணம்.
ஒரு முறை மருந்து
ரூ. 5—0—0.

ஷண்முகாநந்த வைத்தியசாலை,
228 பி. திருவாரூர்.

குடி அரசு பத்திரிகை

நமது திராவிடன் ஆபீஸில் கிடைக்கும். விலை 0 1 0

நான்காவது வருஷம்!! நான்காவது வருஷம்!!

தமிழ் நாட்டிலும் அயல் நாட்டிலுமுள்ள பதினாயிரக்கணக்கான
தமிழர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் நல்விருந்து அளித்துப் பேரானந்தத்தைத் தருவது எது?

ஆனந்த விகடன்

என்பதில் ஏதேனும் சந்தேக முண்டா? சென்ற வருஷத்தில் மட்டும் சுமார் 8000-சந்தாதாரர்களுக்கு மேல் ஆனந்த விகடனின் பெருமையையறிந்து சந்தாதாரராய்ச் சேர்ந்துகொண்டனர்.

ஆனந்த விகடன் மானிடருக்கு நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடியது.

ஆனந்த விகடனைப் படிப்போர் நித்தியத்தை நினைத்துச் சத்தியத்தைக் கடைப்பிடித்து தொழுது நற்பெயர் அடைவர்.

ஆனந்த விகடனைக் கற்றறிந்த வித்வான்கள் மெச்சுகின்றனர். ஏனென்றால், வித்வான் என்றவர்களைக் காட்டிலும் பெரிய மேதாவிகள் விகடனுக்கு வியாசம் எழுதுகிறார்கள்.

ஆனந்த விகடனை வயோதிகர் மெச்சுகிறார்; ஏனென்றால், வயோதிகருக்கு பொழுதே போகிறதில்லை. ஆனால் நமது விகடனை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டால், யுகம் போன்ற நேரம் கணம்போல் மாறிவிடும்.

ஆனந்த விகடனைக் குடும்பஸ்தர் விரும்புகின்றனர்; ஏனெனில், குடும்ப சம்பந்தமான எல்லாவித இரகசியங்களையும் எடுத்துப் போதிப்பதில் விகடன் கொஞ்சமும் பின் வாங்கியதில்லை. அரிய பெரிய குடும்ப சாஸ்திரங்களினின்றும் விஷயங்கள் எடுத்து விகடனில் வெளியாகின்றன.

ஆனந்த விகடனை பால்யர் விரும்புகிறார். ஏனென்றால், அவர்களுடைய நல்வளர்ச்சிக்காக விகடன் வெகு நாட்களாகவே பாடுபட்டு வருகிறான். சரீரத்தை எப்படிப் பாதுகாப்பது, வியாதிகள் வரவொட்டாமல் தடுப்பதெப்படி? மனோவளர்ச்சியை உண்டாக்குவதெப்படி யென்பது போன்ற விஷயங்கள் விகடனில் அடிக்கடி வெளியாகும்.

ஆனந்த விகடனைக் குழந்தைகளும் விரும்பும்; ஏனென்றால், குழந்தைகளுக்கான சிறிய விஷயங்களும் உண்டு.

ஆனந்த விகடனைப் பெண்டுகள் விசேஷமாக விரும்புகின்றனர். ஏனென்றால், பெண்மக்களுக்குரிய உபதேசங்களை நம் விகடனில் ஏராளமாகக் காணலாம். ஆனந்த விகடனை விடாமல் படித்து வரும் ஸ்திரீகள் ஆயிரக் கணக்காக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தமக்குப் படிக்க நேரமில்லாவிட்டாலும் தம்மனைவியாவது படிக்கட்டும் என்ற நோக்கத்துடன் ஆனந்த விகடனை வாங்கிக் கொடுக்கிறார்கள்.

ஆனந்த விகடனை எல்லோருமே ஏன் விரும்புகிறார்கள் என்றால் தமிழ் நாட்டிலே 64-பக்கங்கொண்ட மாதப் பத்திரிகை இந்த சொல்ப சந்தாத் தொகைக்கு எதுவுமே கிடையாது. மேலும் குறித்த தேதி தவறாமல் வெளிவருகிறது. 64-பக்கங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு நூதன விஷயம். எத்தேசத்தாரும், எந்த வகுப்பினரும், புருஷர், ஸ்திரீகள் யாவரும் ஏற்கும்படியான சஞ்சிகை இது. நமது முதல் கொண்டு பஞ்சாங்கம் வரையில் எஸ். பி. ஏ. கம்போஸ் செய்யவும் நமது முன்னேற்றம் விவசாயம், சுகாதாரம், வைத்தியம், கைத்தொழில் முறைகள், வாழ்க்கை விநோதங்கள், மாணவர் பகுதி, பெண்மக்கட் பகுதி, நாவல் பகுதி, பிரபஞ்ச விநோதங்கள், திரட்டுப்பால், சென்ற மாத நிகழ்ச்சிகள், பொன் மொழிகள், பழமை இந்தியா, சின்னஞ்சிறு தமாஷ், விகடன் பேச்சு, பஞ்சாங்கம் முதலிய அநேகம் மாதம் மாதம் வெளியாகின்றன.

ஆனந்த விகடனை எல்லாவற்றையும் விட அதிகமாக ஜனங்கள் விரும்புவதற்குக் காரணம் என்னவென்றால், விகட விஷயங்களைப் படித்துவிட்டால் ஒரே சிரிப்புத்தான். சிரித்து சிரித்து அடங்கவில்லை யென்று பலர் கடிதம் எழுதியுள்ளார்.

பொழுது போக்குக்கும் சரி, தமாஷுக்கும் சரி, அறிவுச்சுடர் கொளுத்தி ஞானத்தையுண்டாக்குவதற்கும் சரி, ஆனந்த விகடனுக்கு நிகரான மாத சஞ்சிகை தமிழ்நாட்டில் கிடையாது.

சந்தா விவரம்

ஒரு வருஷத்திற்கு இந்தியா, பர்மா சிலோனுக்கு தபாற்கூலியுள்பட ரூபா	1—0—0
ஒரு வருஷத்திற்கு சிங்கப்பூர், பினாங்கு, மலாய் நாடுகளுக்கு தபாற்கூலியுள்பட ரூபா	1—4—0

ஆனந்த விகடன் வருஷ அநுபந்தம்

இது மாசி மாதத்தில் வெளிவருவது. நல்ல அழகான வெண்மைக் காகிதத்தில் சுமார் 130-பக்கங்கொண்டதாய் அச்சிடப்படுகிறது. பெரிய தலைவர்களின் உபதேசங்களும், மேதாவிகளின் கட்டுரைகளும் இதில் வெளிவருகின்றன. அநேக அழகிய சித்திரப் படங்களும் விகடப் பகுதிகளும் இதில் உண்டு.

விலை அணா 4 தான்.

அன்பர்கள் அநுபந்தத்திற்கும் சேர்த்து மணியார்டர் செய்யலாம். அநுபந்தம் மட்டும் தனியாக வேண்டுபவர்கள் 5-அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

டெலிபோன் 3311.
(112 எ)
தந்தி விலாசம்:—"விகடன்"

Printed and Published by Mr. J. S. Kannappar at Justice Printing Works, Madras